பக்கங்கள் - 16

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as

மின்னிதழ்

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 11 ஞாயிற்றுக்கிழமை (24.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 157

## செவ்வாய் முதல் ஊரடங்கு நாடு முழுவதும் தளர்வு

### தினமும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை அமுலில்

(கொழும்பு)

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் நாடு முழுவதும் ஊரடங்கு தளர்த்தப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மே 26 செவ்வாய் முதல் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்குச் 02

## உயர்தரத்தில் சாதித்த மாணவன் குளத்தில் மூழ்கி உயிரிழப்பு

### முல்லைத்தீவில் சம்பவம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உயர்தரத்தில் சாதித்த மாணவன் ஒருவன் குளத்தில் குளிக்கச் சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமடு குளத்தில் இடம்பெற்றுள்ளது.


உயிரிழந்த மாணவன் புதுக்குடியிருப்பு கைவேலியைச் சேர்ந்த 20 வயதுடைய பிரதீப்குமார் வளர்சிகன் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் குறித்த மாணவன் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 02

### போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படாதது தவறான சமிக்ஞையே

# ஐ.நாவிலிருந்து வெளியேறினாலும் இலங்கையை கட்டுப்படுத்தலாம்

### போர்க்குற்ற விவகாரங்களுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஸ்ரீபன் ராப் தெரிவிப்பு



(ஜெனிவா)

**இலங்கையில் போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படாதது ஓர் தவறான சமிக்ஞையே எனத் தெரிவித்துள்ள போர்க்குற்ற விவகாரங்களுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஸ்ரீபன் ராப், ஐ.நாவிலிருந்து வெளியேறினாலும் இலங்கையைக் கட்டுப்படுத்தலாம் என்று தெரிவித்துள்ளார்.**

இணையவழியூடாக நடைபெற்ற நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வின் தொடக்க நிகழ்வில். சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு பேசும் போதே இக்கருத்தினை தெரிவித்திருந்த தூதுவர் ஸ்ரீபன் ராப். இலங்கை உலகத்தில் இருந்து தனிமைப்படுத்தப்படும் நிலையில் உள்ளதென தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் போர்க் குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் பலர் உலகளவில் தண்டிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனடிப்படையில், சர்வதேச சட்டங்களை மீறி குற்றங்களை புரிகின்றவர்கள் தண்டிக்கப்படுவர் என பண்பாட்டை வளர்க்க வேண்டிய தேவையுள்ளது. இதற்கு கட்டுப்படாமல் இலங்கை இருப்பதனை நம்மால் ஏற்க முடியாது. 02

### கேப்பாப்புலவில் 5 படையினருக்கு கொரோனா

(பனிக்கன்குளம்)

கேப்பாப்புலவு தனிமைப் படுத்தல் முகாமில் தனிமைப் படுத்தப்பட்டுள்ள கடற்படையைச் சேர்ந்த 10 பேருக்கு ஏற்கெனவே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்ற நிலை 02

### நேற்றும் 21 பேருக்கு கொரோனா

## பாதித்தோர் எண்ணிக்கை 1,089 ஆக உயர்வு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 21 பேர் நேற்று சனிக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்புப் பிரிவு அறிவித்துள் 02

### தம்மைத் தாக்கியதாக தெரிவித்து

## மூவரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த இராணுவம்

### உரும்பிராயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தம்மைத் தாக்கியதாக தெரிவித்து மூவரைப் பிடித்து இராணுவத்தினர் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

உரும்பிராய்ப் பகுதியில் உள்ள இராணுவக் காவலரணில் நின்ற இராணுவத்தின 02

## அமெரிக்காவில் ஒரு இலட்சத்தை நெருங்கும் கொரோனா பலியெடுப்பு

### உலகம் முழுவதும் 53 இலட்சம் பேர் பாதிப்பு

(ஜெனிவா)

உலகையே அச்சுறுத்தும் கொடிய கொரோனா வைரஸால் அமெரிக்காவில் மட்டும் 15 இலட்சத்துக்கு அதிகமானோர் பாதிப்படைந்துள்ளனர்.

அமெரிக்காவில் மட்டும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை நெருங்கியுள்ளது.

சீனாவில்உருவான கொரோனா வைரஸின் தாக்கம் உலகின் பல்வேறு நாடுகளில் பரவி அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. 02

## தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படுகின்றதா என சந்தேகம் எழுகிறது

### முன்னாள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல



(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழு தற்போது நடந்துக் கொள்ளும் விதத்திற்கு அமைய ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படுகிறதா என்ற சந்தேகம் எழுவதாக முன்னாள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டத்திற்கு அமைய வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, குறைந்தது 5 அல்லது 7 வாரங்களுக்குள் தேர்தலை நடத்த வேண்டும். வேட்புமனுக்கள் தாக்கல் செய்வது மார்ச் மாதம் 19ஆம் திகதி முடிவடைந் 02

## உயர்தரத்தில்...

யில் உயர்தரப் பரீட்சை 2019 வர்த்தகப் பிரிவில் மாவட்ட ரீதியில் மூன்றாம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளான் எனவும் அறிய முடிகின்றது.

சம்பவ இடத்திற்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-114,281)

## மூவரை பிடித்து...

ருக்கு நேற்று மாலை தாக்குதல் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இம்மூவரும் முச்சக்கரவண்டியில் வந்தவர்கள் என்றும் கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவத்தினரை தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்ட மூவரும் கோப்பாய், அனலைதீவு மற்றும் சங்கானை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மூவர் மீதும் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-101)

## செவ்வாய் முதல்...

சட்டம் மறு அறிவித்தல் வரை தினமும் இரவு 10.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரை மட்டுமே அமுல்படுத்தப்படும்.

மே 26 செவ்வாய் முதல் கொழும்பு மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கிடையே போக்குவரத்திற்கு அனுமதியளிக்கப்படும்.

இன்று 24 ஞாயிறு மற்றும் நாளை 25 திங்கள் ஆகிய இரு தினங்களும் நாடு முழுவதிலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஐ.நாவிலிருந்து...

இலங்கையில் போர்க்குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் கூண்டில் ஏற்றப்படாமை, தண்டிக்கப்படாமை ஓர் தவறான சமிக்ஞையாக இலங்கை இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## தேர்தல் ஆணைக்...

ததுடன் ஏப்ரல் 25 ஆம் திகதி வரை மொத்தம் 36 நாட்கள்.

இவ்வாறான நிலைமையில் தேர்தலை நடத்துவதற்காக சுமார் 70 நாட்கள் வரை கால அவகாசம் தேவை எனக் கூறியுள்ளமை சந்தேகத்திற்குரியது.

தேர்தலை நடத்துவதற்கு ஏதுவான சூழ்நிலை நாட்டில் காணப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறியிருக்கும் நிலையில் தொடர்ந்தும் தேர்தலை ஒத்திவைக்க தேர்தல்கள் ஆணைக்குழு முயற்சித்து வருகிறது.

முடிந்தவரை தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்ற தேவை ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க் கட்சிகளுக்கு இருக்கின்றது.

மக்களின் ஜனநாயக வாக்குரிமையை பாதுகாக்க வேண்டும். தேர்தலை நடத்த ஏதுவான சூழ்நிலை காணப்படுகிறது.

சுகாதாரத் துறையினர் உறுதிப்படுத்தினால் முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தலை நடத்த வேண்டும் எனவும் ஹெகலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## பாதித்தோர் எண்...


ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை ஆயிரத்து 89ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

நேற்று இரவு 10.45 மணி வரை 21 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 5 பேர் முல்லைத்தீவு கேப்பாப்புலவு

### தமிழர்கள் பிரிந்து செல்ல விரும்புவது ஏன் என

# இலங்கை அரசாங்கம் தன்னைத்தானே கேட்க வேண்டும்



## கிழக்கு திமோரின் முன்னாள் ஜனாதிபதி முனைவர் ஹொசே ரமோஸ் ஹோர்தா

**(டிலி)**

**தமிழர்கள் பிரிந்து செல்ல விரும்புவது ஏன் எனத் தன்னைத்தானே இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொள்வதும், தமிழர்களிடம் அதனைக் கேட்டுப் பார்ப்பதும் இலங்கை அரசின் பொறுப்பு என கிழக்குத் திமோரின் முன்னாள் ஜனாதிபதியும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான முனைவர் ஹொசே ரமோஸ் ஹோர்தா தெரிவித்துள்ளார்.**

நாடு கடந்த தமிழீழ அரசு ஏற்பாடு செய்திருந்த முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வில் உரையாற்றிய போது இதனை தெரிவித்தார்.

கிழக்கு திமோர் தலைநகரம் டிலியிலிருந்து இணையவழியே அவர் வழங்கிய முள்ளிவாய்க்கால் நினைவுப்பேருரையில் தெரிவித்திருப்பதாவது,

கத்தலோனியா மக்கள் நூற்றாண்டுக் கணக்கில் சேர்ந்து வாழ்ந்த பின் பிரிந்து செல்ல விரும்புவது ஏன் என்ற கேள்வியை மட்ரிட் தனக்குத்தானே கேட்டுக் கொள்ள வேண்டும் என்பது போலவே, ஸ்காட்டுகள் பிரித்தானியாவிடம் இருந்து பிரிந்து செல்ல விரும்புவது ஏன் என்று லண்டன் தன்னைத்தானே கேட்டுக் கொள்ள வேண்டும் என்பது போலவே, இலங்கை அரசாங்கமும் தமிழர்கள் பிரிந்து செல்ல விரும்புவது ஏன் என்று கேட்டுக் கொள்ள வேண்டும்.

தமிழர்களைப் போன்று மாபெரும் இன அடையாள உணர்வும் வரலாற்று உணர்வும் கொண்ட ஒரு தேசிய இன மக்கள் தனித்திருக்க விரும்புவது ஏன்? தம்மைத் தாமே கேட்டுக் கொள்ளும் பொறுப்பு ஆளும் அரசுகளுக்கு இருக்கிறது. ஏதோ தவறு நடந்திருக்க வேண்டும் என்பதையும் அரசுகள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஸ்பெயினில் கத்தலோனியர்களும் துருக்கியில் குர்துகளும், ஐக்கிய பிரித்தானிய முடியரசில் ஸ்காட்டுகளும் நடத்தி வரும் நிகழ்காலப் போராட்டங்களைப் போலவே, தமிழ் மக்களின் போராட்டமும் நியாயமானது என்றார்.

தன்னாட்சிக்கும் தேசியத்துக்குமான போராட்டம் ஒரு வரலாற்று உண்மையாகும். ஒவ்வொரு தேசமும் சுதந்திரமாக இருக்க வேண்டும் என விரும்புகின்றன. ஆனால் அந்த சுதந்திரத்தின் பொருள் பிரிவினையாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை என்றார்.

இலங்கை அரசாங்கம் கூடுதல் வலுவாற்றலாக இருப்பதால் பெளத்தத்தின் கருணையைக் காட்டி, தமிழ் மக்களைத் தேடிச்சென்று உதவலாம் என்பது முனைவர் ரமோஸ் ஹோர்தாவின் கருத்து.

ஒருபோதும் நம்பிக்கை இழக்காதீர்கள், ஒருபோதும் கனவு காண்பதை நிறுத்திக் கொள்ளாதீர்கள் என்று அவர் தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டார். எதுவரினும் வெற்றி உங்களுக்கே என்று கூறித் தன் உரையை நிறைவு செய்தார்.

மே 18 முள்ளிவாய்க்கால் துயரத்தை நினைவிற்கொள்ளும் பொருட்டு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஆண்டுதோறும் முள்ளிவாய்க்கால் நினைவுப் பேருரை நிகழ்வை ஒழுங்கு செய்து வருகிறது. பலவாறான பின்னணிகள் கொண்டோரும் அமெரிக்கா, கொசோவோ, தெற்கு சூடான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தோருமான புகழார்ந்த பேச்சாளர்கள் முன்சென்ற ஆண்டுகளில் இந்தப் பேருரையை ஆற்றியுள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

இராணுவ முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள கடற்படையினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை 660 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

420 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## 5 படையினருக்கு...

யில் மேலும் 5 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எஸ். சுகந்தன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கடற்படையைச் சேர்ந்த 250 நபர்கள் முல்லைத்தீவு கேப்பாப்புலவு விமானப் படை முகாமிலும் 149 பேர் இராணுவ முகாம்களிலும் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்காக கொண்டு வரப்பட்டிருந்தனர்.

இவர்களில் 99 பேருக்கான பரிசோதனைகள் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற நிலையில் அவர்களில் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் வெலிகந்த மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும்.

அதனைத் தொடர்ந்து நேற்றைய தினம் 40 பேருக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவர்களில் 5 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களையும் வெலிகந்த வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம-281)

# இலங்கை ஆட்சியாளர்கள் தமிழர்கள் மீது புதுவகையான அடக்குமுறை

## கயானா நாட்டின் முன்னாள் அதிபர்

(ஜோர்ஜ்ரவுன்)

இலங்கைத் தீவில் காலனித்துவவாதிகள் வழங்கிய சுதந்திரத்துக்கு பின்னராக, தமிழர்களுக்கு ஓர் விடுதலைவாழ்வு கிடைப்பதற்கு பதிலாக இலங்கையின் ஆட்சியாளர்களின் புதுவகையான ஓர் காலனித்துவ அடக்குமுறையே தமிழர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது என மத்திய அமெரிக்காவின் கயானா நாட்டு முன்னாள் அதிபர் டொனால்ட் றமோதார் தெரிவித்துள்ளார்.

இணையவழியூடாக நடைபெற்ற நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வின் தொடக்க நிகழ்வில், சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு பேசும் போதே இக் கருத்தினை அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் பல்வேறு ஒடுக்கு முறைச் சட்டங்களை கொண்டு வந்திருந்ததோடு, இதற்கு எதிரான தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தினை ஓர் சாக்காக வைத்து தமிழர்கள் மீது பாரிய படுகொலையினை மேற்கொண்டுள்ள நிலையிலேயே இலங்கையின் சர்வாதிகாரிகளை எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உங்களுக்கு கிடைக்கின்ற வெற்றி என்பது உலகம் முழுவதும் ஒடுக்கப்பட்டவர்களுக்கான வெற்றியாக நீதியாக அமையும். அந்த வெற்றியினை நோக்கி நீங்கள் பயணிக்க வேண்டும்.

உங்களின் தேசிய விடுதலைக்கான போராட்டத்தில் என்றும் உங்களோடு நாங்கள் (கயானா நாடு) இருக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## அமெரிக்காவில்...

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த பல நாடுகளிலும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சவுதி அரேபியாவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 70 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 2,442 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, சவுதி அரேபியாவில் கொரோனா பாதிப்பு 70,161 ஆக அதிகரித்துள்ளது.

ஒரே நாளில் 15 பேர் பலியானதை அடுத்து அங்கு பலி எண்ணிக்கை 379 ஆக உயர்ந்துள்ளது என அந்நாட்டு சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

# கோண்டாவில் மேற்கு உப்புமடம் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின்

## வருடாந்த மஹோற்சவம் நிறுத்தம்

(கோண்டாவில்)

கோண்டாவில் மேற்கு உப்பு மடம் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் 2020ஆம் ஆண்டு மஹோற்சவம் கொரோனாத் தொற்றின் காரணமாக முற்றாக நிறுத்தப் பட்டுள்ளதாக ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சிறீஸ்கந்தராஜா குருக்கள் தெரிவித்துள்ளார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாக வேண்டிய மஹோற்சவத்தின் 12 தினங்களும், மஹோற்சவ தினமாக மாத்திரம் நடைபெற வுள்ளது. மஹோற்சவ தினங்களாக காலை-10 மணி முதல் நண்பகல்-12 மணி வரை சாதாரண அபிஷேகம், பூசை மாத்திரம் இடம்பெறும். உபயகாரர் உள்ளிட்ட ஐந்து பேர் மாத்திரமே இதில் கலந்து கொள்வார்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-18)

# இலங்கை மீன்பிடிப் படகுகளை தரைக்கு கொண்டு வருவதில் கடற்படை

(கொழும்பு)

அம்பன் சூறாவளியினால் ஏற்பட்ட சீரற்ற காலநிலையினால் இந்தோனேஷியா கடற்பரப்பிற்கு அருகாமையில் இழுத்துச்செல்லப்பட்டு கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த இலங்கை மீன்பிடி படகுகளை தரைக்கு கொண்டு வருவதில் இலங்கை கடற்படைக்குச் சொந்தமான சமுதுர கப்பல் ஈடுபட்டிருப்பதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கை மீன்பிடிப் படகுகளை மீட்பதற்காக அங்கு சென்ற கடற்படைக் கப்பல் படகுகளுக்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது.

அம்பாந்தோட்டை மற்றும் காலி மாவட்டங்களிலிருந்து சென்ற குறித்த மீன்பிடிப் படகுகளுடன் 180 மீனவர்களை மீட்பதில் கடற்படை கப்பல் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# யாழில் நேற்று 53 பேருக்கு கொரோனா பரிசோதனை

## ஒருவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்றுச் சனிக்கிழமை 53 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்றில்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பலாலி தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 15 பேர், இரணைமடு தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 8 பேர், புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 8 பேர், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 7 பேர், பெரியகாடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 5 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட 5 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த 4 பேர், முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-18)

# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் | சிகிச்சை பெற்று வருபவர்கள் |
|---|---|---|---|
| 1089 | 660 | 009 | 420 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 5,372,738 | 2,225,441 | 342,634 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 5,372,378 | 74,531 | 342,634 | +3,209 |
| ஐ.அமெரிக்கா | 1,656,694 | 11,600 | 98,254 | +607 |
| இத்தாலி | 229,327 | 669 | 32,735 | +119 |
| ஸ்பெய்ன் | 282,370 | 466 | 28,678 | +50 |
| சீனா | 82,971 | 0 | 4,634 | 0 |
| ஜேர்மனி | 179,768 | 55 | 8,354 | +02 |
| பிரான்ஸ் | 182,469 | 250 | 28,332 | +43 |
| ஈரான் | 133,521 | 1,869 | 7,359 | +59 |
| ஐ.இராச்சியம் | 257,154 | 2,959 | 36,675 | +282 |
| இந்தியா | 131,423 | 6,629 | 3,868 | 142 |

இன்று அதிகாலை 12.30 நிலைவரப்படி

## தெளிவான சிந்தனையுடன் விரைவாகவே

# கடினமான தீர்மானங்களை கோட்டா மேற்கொள்ளக்கூடியவர்

## தொலைபேசியில் இந்திய பிரதமர் மோடி புகழாரம்

**(கொழும்பு)**

**தெளிவான சிந்தனையுடன் விரைவாகவே கடினமான தீர்மானங்களை ஜனாதிபதி கோட்டா மேற்கொள்ளக்கூடியவர் என இந்தியப் பிரதமர் மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.**


கோப்புப்படம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச்சுக்களை மேற்கொண்டார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இரு நாடுகளுக்கும் இடையிலான அனைத்து வகையான உறவுகளையும் கோவிட் பிரச்சினைக்கு மத்தியிலும் மேலும் மேம்படுத்துவதற்கு இணக்கம் தெரிவித்தனர்.

ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து இந்திய பிரதமருடன் உரையாடிய ஜனாதிபதி பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் பற்றி கருத்துக்களை பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி தெரிவித்ததுடன், தற்போதைய கஷ்டமான காலகட்டத்தில் இலங்கைக்கு செய்த உதவிகள் தொடர்பில் பிரதமர் மோடிக்கும் இந்திய மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

இந்தியா அன்பளிப்பு செய்த 10 தொன் மருத்துவ உதவிகள் பெரிதும் பயனளித்ததாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்தியா கோவிட்-19 நோய்த் தொற்றை சிறப்பாக கட்டுப்படுத்தியுள்ளது என நான் நம்புகின்றேன். அதற்காக நீங்கள் மேற்கொண்ட முயற்சிக்கு குறிப்பாக குறைந்த வசதிகளைக் கொண்டவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார நிவாரணங்களை நான் பாராட்டுகிறேன்.

இலங்கையில் நாமும் நோய்த் தொற்றை திருப்திகரமாக கட்டுப்படுத்துவதில் வெற்றியடைந்திருக்கின்றோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த இந்திய பிரதமர் 130 கோடி மக்களை கையாள்வது கடினமானது என்ற போதும் நோய்த் தொற்று பரவலை சுமார் 75வீதம் கட்டுப்படுத்த முடிந்திருப்பதாக தெரிவித்தார்.

தெளிவான சிந்தனையுடன் விரைவாக கடினமான தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய ஒரு தலைவராகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தான் புரிந்து வைத் திருப்பதாக பிரதமர் மோடி குறிப்பிட்டார்.

என்னிடமுள்ள தகவல்களின் படி இலங்கை நோய்த்தொற்றை சிறப்பாக கட்டுப்படுத்துவதில் வெற்றியடைந்துள்ளது. அதன் கௌரவம் உங்களையே சாரும் என்றும் இந்திய பிரதமர் மேலும் தெரிவித்தார்.

தற்போது தனது முன்னுரிமை பொருளாதார புத்தெழுச்சியாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி சில முன்னணித் திட்டங்களுக்கு மீண்டும் உயிரூட்டுவதற்கு இந்தியாவின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விரைவாக நிர்மாணிப்பது அவற்றில் ஒன்றாகும். பெறுமதி சேர்க்கப்பட்ட கைத்தொழில் மற்றும் விவசாய உற்பத்திகளை மேம்படுத்துவது மற்றுமொரு நோக்கமாகும். இத்துறைகளில் முதலீடு செய்யுமாறு இந்திய வர்த்தகர்களையும் தற்போது இலங்கையிலிருக்கும் இந்திய கம்பனிகளையும் ஊக்குவிக்க முடியுமானால் அது கொரோனாவுக்கு பிந்திய காலப்பகுதியில் பொருளாதார புத்தெழுச்சிக்கு உதவியாக அமையும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையில் நடைமுறையில் உள்ள நிதி வசதிகளை பரிமாறிக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கு ஜனாதிபதி முன்மொழிந்தார். சார்க் பரிமாற்ற வசதியின் கீழ் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ள 400 மில்லியன் டொலர்களுக்கு 1.1 பில்லியன் டொலர்களை சேர்ப்பதற்கு இந்திய அரசாங்கம் இணங்கினால் அது அந்நிய செலாவணிப் பிரச்சினையை முகாமைத்துவம் செய்வதற்கு பெரும் உதவியாக அமையும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் மோடி இலங்கைக்கு உதவுவதற்கு நான் தனிப்பட்ட முறையில் அர்ப்பணிப்புடன் செயல்படவுள்ளேன். இலங்கைக்கு சாதகமான நிபந்தனைகளின் கீழ் உதவுவதற்கு நாம் தயாராகவுள்ளோம். இதற்காக கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகருடன் இணைந்து பணியாற்றுவதற்கு பொருத்தமான ஒரு பிரதிநிதியை நியமியுங்கள் என்று தெரிவித்தார்.

தற்போது கட்டியெழுப்பப்பட்டுள்ள இருதரப்பு கூட்டுப்பங்காண்மை மக்களுக்கு நேரடி நன்மைகளை கொண்டுவரும் மற்றும் உணவு. சுகாதார பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்த திட்டங்களாக முன்னெடுப்பதற்கு இரு தலைவர்களும் இணக்கம் தெரிவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மன்னார் ஆயருடன் டக்ளஸ் கலந்துரையாடல்



(மன்னார்)

மன்னாருக்கு நேற்று விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பிடலிஸ் லயனல் இமானுவேல் பெர்னான்டோ ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச் சந்திப்பு மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

நாட்டின் சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பிலும் கடற்றொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளார்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் தற்போதைய நிலைவரம் தொடர்பாகவும் அமைச்சர் ஆயரிடம் கேட்டு அறிந்து கொண்டார்.

இதன் போது மன்னார் மாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை அன்ரனி விக்டர் சோசை கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு இரு மாதங்களில் 900 இலட்சம் ரூபாய் நட்டம்

(கொழும்பு)

இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு கடந்த இரண்டு மாதங்களில் 900 லட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பிரதி முகாமையாளர் வீ.எஸ்.பொல்வத்தகே தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் காரணமாக கடந்த இரு மாதங்களாக புகையிரத சேவை நிறுத்தப்பட்டுள்ளதோடு புகையிரதத்தில் பயணிப்பதற்காக விநியோகிக்கப்படும் பருவகாலச் சீட்டுகள் கடந்த இரண்டு மாதங்களாக விநியோகிக்கப்படவில்லை என்பதே இதற்குக் காரணம் எனவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது குறைவான புகையிரதங்களே சேவையில் ஈடுபடுத்தப்படுவதால் போதிய வருமானம் கிடைப்பதில்லை எனவும் பிரதி முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார். (ம)

மீண்டும்
வெளிநாடுகளுக்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536
(C-9600)

முயற்சியானது வளர்ந்துதேயும் சந்திரன் அல்ல. அது மேலும் மேலும் வளர்ந்து கொண்டிருப்பது தான். – பிளிங்டன் மோசஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வறுமைத் தீ மூழாதிருக்க முயற்சியே மூலதனம்

கொரோனாத் தொற்றுக் காரணமாக எதிர்காலத்தில் உலகம் முழுமையும் ஆட்டம் காணவுள்ளதான எதிர்வு கூறல்கள் வந்த வண்ணமுள்ளன.

இங்கு கொரோனாவால் ஏற்படும் பாதிப்புகள் என்பதைக் கடந்து, உலக மக்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடப்பதன் காரணமாக பொருளாதாரம், தொழில் முயற்சிகள், கல்வி என அத்தனையும் பாதிக்கப்படப் போகின்றது என்ற அபாய எச்சரிக்கைகள் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்த எச்சரிக்கைகளை எவரும் சாதாரண விடயமாகக் கருதிவிடக்கூடாது.

இங்கு பொருளாதாரப் பாதிப்பு என்பது அவரவர் தகைமை நிலைமைக்கு ஏற்ப அமையும்.

அதாவது வறுமைக்கோட்டுக்குள் வாழ்கின்ற மக்கள் எதிர்காலத்தில் பசி, பஞ்சம் என்ற அவலத்துக்கு ஆளாகப் போகின்றனர் எனும் எதிர்வு கூறல்கள் மனிதப் பேரவலத்தை முன்கூட்டியே முறையிடுவதாகும்.

இலங்கையில் வறுமை நிலை அதிகரிப்பது தவிர்க்க முடியாத விடயம் எனக் கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சிறிமால் அபயரட்ண அவர்கள் ஒரு சில தினங்களுக்கு முன்னர் கூறியுள்ளார்.

அவர் கூறிய அதே எச்சரிக்கையை எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைப் பேராசிரியர் வி.பி.சிவநாதன் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்ததுடன் கொரோனாவால் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவர் விரிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

இதேபோன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன் ஆகியோர் வீட்டுத் தோட்டத்தின் அவசியம் பற்றி விதந்துரைத்துள்ளனர்.

இவை அத்தனையும் எதிர்கால வறுமைக்கு ஒத்தடம் கொடுக்கின்ற செயற்பாடாகும்.

எனினும் எங்கள் நாட்டைப் பொறுத்தவரை கொரோனா என்பது ஒரு விடுதலைக்குரிய விடயமாக இருக்கிறதே தவிர, அதன் சமகால ஆபத்துக்கள் பற்றியோ அன்றி அதனால் ஏற்படப் போகும் எதிர்கால வறுமை நிலைக்கு முகம்கொடுப்பது பற்றியோ நாம் கருசனை கொள்வதாக இல்லை.

கொரோனாத் தொற்றுக் காரணமாக ஏற்பட்டுள்ள வறுமை நிலையை அரசாங்கத்தின் கொடுப்பனவுகளும் சமூக அக்கறை கொண்டவர்களின் நிவாரண உதவிகளும் தாக்குப்பிடிக்கின்றன.

ஆனால் இந்த உதவிக் கொடுப்பனவுகள் தொடர்ந்து இருக்கும் எனக் கூற முடியாது.

ஆனால் கொரோனா ஆபத்து முடிவற்றதாகத் தெரிகிறது.

இங்குதான் எதிர்கால வறுமை பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இந்தச் சிந்தனை கடும் முயற்சி, கடும் உழைப்பு, சேமிப்பு என்றவாறு அமைவதுடன் குடிபோதை, புகைத்தல் என்பவற்றை முற்றாகக் கைவிடுதல் என்ற முடிவுக்கு வருவதையும் வலியுறுத்தி நிற்கிறது.

# இராணுவ பதவி உயர்வுகள் பாதுகாப்பு வழங்கும் செயற்பாடா?

## யஸ்மின் சூக்கா கேள்வி

(ஜெனிவா)

இராணுவ அதிகாரிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள பதவி உயர்வுகளானது, இலங்கையர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் பேச்சளவிலான நல்லிணக்கம் கூட இல்லை என்ற செய்தியையே அனுப்புவதாக உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகளை வழங்கியுள்ள இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடானது, அரசியலை அடிப்படையாகக் கொண்டது என்றும் இது இலங்கையர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் பேச்சளவிலான நல்லிணக்கம் என்பது கூட இல்லை என்ற செய்தியை மீண்டும் அனுப்புகின்றது என்றும் யஸ்மின் சூக்கா தனது அறிக்கையில் தெரிவித்தார்.

மேலும், இது பாதிக்கப்பட்டவர்களை இழிவுபடுத்தும் இன்னுமொரு செயலாகவும், தண்டனையிலிருந்து துணிவாக பாதுகாப்பு வழங்கும் செயலாக உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பு துறைச் சீர்திருத்தத்திற்கான ஐ.நாவின் 30 இன் கீழ் முதலாம் இலக்கத் தீர்மானம், இலங்கையின் உறுதிப்பாடுகளுக்கு இணங்க உத்தியோக பூர்வமான பதவிகள் வழங்கப்பட முன்னர், அதிகாரிகள் வடிகட்டல் மற்றும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரியங்க பெர்ணண்டோ இலங்கையின் இராஜ தந்திரியாக இருந்த வேளையில், பொதுக் கட்டளைச் சட்டத்தை மீறியதாக பிரித்தானிய நீதிமன்றத்தால் குற்றங்காணப்பட்ட இவருக்கு, வழங்கப்பட்ட பதவி உயர்வானது இதில் மிகவும் முக்கியமானதாகும்.

2018 இல் உயர் ஆணையகக் கட்டடத்திற்கு வெளியே தமிழ் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கழுத்தை அறுக்கும் சைகையினைக் காட்டி அச்சுறுத்தல் மேற்கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டார்.

இவர் குற்றச் செயல்கள் புரிந்த போதும் இவர் இலங்கைக்கு திரும்பிச் சென்றதில் இருந்து இவருக்கு மீண்டும் மீண்டும் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டதுடன் ஒரு மாவீரனாகவும் அழைக்கப்பட்டார் என்றும் அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டினார்.

அதிகரித்த இராணுவமயமாக்கல் மற்றும் ஜனாதிபதிக்கு நெருக்கமான ஓய்வு பெற்ற மற்றும் சேவையாற்றும் அதிகாரிகளுக்கு சிவில் பதவிகள் வழங்கப்பட்டு வரும் பின்னணியில் இந்த பதவியுயர்கள் இடம்பெற்றுள்ளன.

கொரோனாவினால் பாதுகாப்புப் பற்றிய கரிசனைகள் இருந்த போதும் ஆயுதப் படையினரை உள்ளடக்கி இந்த வாரம் கொழும்பில் ஒரு போர் ஞாபகார்த்த நிகழ்வு ஒன்றினை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் இவ்வாறான ஞாபகார்த்த நிகழ்வு வடக்கு- கிழக்கில் இடம் பெறுவதைத் தடுப்பதற்கு பாதுகாப்புப் படையினரால் வைரஸ் ஒரு சாட்டாகப் பயன்படுத்தப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# அத்தியாவசியப் பொருட்கள் மீதான வரி அதிகரிப்புக்கு முறைகேடான ஆட்சிமுறையே காரணம்- மயந்த

(கொழும்பு)

அரசாங்கத்தின் முறைகேடான ஆட்சிமுறையின் காரணமாகவே அத்தியாவசியப் பொருட்களுக்கு வரி அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க, தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தர உள்ளிட்ட அதிகாரிகள் அனைவரும் பொறுப்புக் கூறவேண்டி ஏற்படும் என்றும் எச்சரித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு காரணம் நிதி முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளாமையே.

அதனாலேயே இன்று பெருமளவான அத்தியாவசியப் பொருட்களின் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. மாளிகாவத்தை அனர்த்தமும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியையே காண்பித்துள்ளது.

இந்தச்சம்பவத்தில்மூன்று பேர் உயிரிழந் திருந்தனர். இதற்கு அரசாங்கமே பொறுப்புக்கூறவேண்டும்.

வைரஸ் பரவலினால் எவ்வித வருமானமுமின்றி பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உரிய முறையில் ஐயாயிரம் ரூபாய் நிவாரணத்தை வழங்கி யிருந்தால், மக்கள் இவ் வாறு உயிரிழக்க வேண்டி ஏற்பட்டிருக்காது. தொடர்ந்தும் காலங்கடத்தாமல் இந்த நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்த நிவாரணப் பணிகளில் இராணுவத்தினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் பணிகளுக்கு மேலதிகமாக நாடு முழுவதும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான வெள்ள நிவாரண நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டனர்.

இந்த நிவாரண நடவடிக்கைகள் பொதுமக்களுக்கான இராணுவ உதவி எனும் இராணுவத்தின்படைசாரா வகிபாகத்தின் (Non-Military Role) ஒரு பகுதியாக முன்னெடுக்கப் படுகிறது. கடந்த 18ஆம்திகதி முதல் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு இயல்பு நிலைக்குக் கொண்டுவரப்பட்ட பகுதிகள், சீரற்ற வானிலையால் ஏற்பட்ட மழைவீழ்ச்சி காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டன.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக நாட்டின் 16 மாவட்டங்களில் வெள்ள அனர்த்தங்கள் மற்றும் மண்சரிவு அபாயம் இடம்பெற்றுள்ளது. கண்டி மாவட்டத்தின் கம்பளை பிரதேசத்திலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேச வாசிகளுக்கு, மத்திய பாதுகாப்புப்படையின் 11 ஆவது பிரிவின் 116 ஆவது பிரிகேட்டைச்சேர்ந்த இலங்கை இராணுவத்தின்மூன்றாவது சிங்க படையணியைச் சேர்ந்த படைவீரர்களால் வெள்ள நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ஜ-4)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியதாகும்.
- மனித ஞானத்தைவிட கடவுளின் மடமை ஞானமிக்கது. மனித வலிமையை விட, அவருடைய வலுவின்மை வலிமைமிக்கது.
- கடவுள் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் புதிய ஆற்றலை பெறுவர். அவர்கள் ஓடுவர். களைப்படையார், நடந்து செல்வர். சோர்வடையார்.
- நீ செய்ய நினைக்கும் செயல் எதுவோ அதைச் செய். அதையும் உனக்கு ஆற்றல் இருக்கும்போதே செய்.
- உங்களுக்குள் ஒருவருக்கொருவர் மட்டுமின்றி அனைவருக்கும், எப்போதும் நன்மை செய்யவே விரும்புங்கள்.
- ஒரே எண்ணமும், ஒரே அன்பும், ஒரே உள்ளமும் கொண்டவராய்த் திகழ்ந்து, ஒரு மனத்தவராயிருந்து என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள்.
- கடவுளிடம் அன்பு செலுத்துவோர், தம் சகோதர சகோதரிகளிடமும் அன்பு செலுத்தட்டும்.
- அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைத்த வாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள்.

# கண்ணாடி முன்னாடி நின்று பாருங்கள் ராஜபக்ஷக்களுடன் டீல் யாரென்பது புரியும்

## ரணில்-சஜித் அணியினரிடையே கருத்துமோதல்

**(கொழும்பு)**

**பொதுத்தேர்தலின் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சியை அதன் கூட்டணியில் சேர்க்கும். ஆனால் அரசாங்கத்துடன் ஒப்பந்தங்களை வைத்திருப்பவர்களை தூக்கி எறியும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்தார்.**



"முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க ஐக்கிய மக்கள் சக்தியையும் எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் அவ் பெயரை ஏற்படுத்தும் வகையில் நாங்கள் ராஜபக்ஷக்களுடன் டீல் செய்து கொண்டிருந்ததன் காரணமாகவே சஜித் எதிர்க்கட்சித் தலைவராக அறிவிக்கப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். இதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதுடன். நவீன் திஸாநாயக்கவை கண்ணாடியின் முன்னர் நின்று அவரது முகத்தை பார்த்து யார் ராஜபக்ஷக்களுடன் டீல் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று வினவிப்பார்க்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 17 பேரையும் அழைத்துக் கொண்டு மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து டீல் செய்து ஐ.தே.கவின் வீழ்ச்சிக்கு வழியமைத்த அவர். இன்று எம்மீது குற்றம் சாட்டி வருகின்றார். அரசாங்கத்திடம் டீல் செய்ய வேண்டிய தேவை எமக்கில்லை.



கட்சி போட்டியிட வேண்டிய சின்னத்தின் வேறுபாடுகளாக இருவருமே ஏன் ஒன்று சேர முடியாது என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. இரு குழுக்களும் பிரிந்து செல்வதற்கான ஒரே காரணம் இதுதான்" என மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பிக்க ஊக்குவிக்கும் குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்குத் தகுதியுள்ள, பொருத்தமானவர்களை அடையாளங்கண்டு துணைவேந்தர் பதவிக்கு அவர்களை விண்ணப்பிப்பதற்கு ஊக்குவிப்பதற்கென மூன்று சிரேஷ்ட பேராசிரியர்கள் கொண்ட தேடற்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

யாழில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற யாழ்.பல்கலைக்கழக விசேட பேரவைக் கூட்டத்திலேயே மூன்று சிரேஷ்ட பேராசிரியர்கள் கொண்ட இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பொறியியல் பீடாதிபதி பேராசிரியர் அ.அற்புதராஜா தலைமையில், வரலாற்றுத்துறை சிரேஷ்ட பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் மற்றும் பௌதிகவியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் பு.ரவிராஜன் ஆகியோர் பேரவையால் தெரிவு செய்யப்பட்டனர்.

பல்கலைக்கழகங்களில்துணைவேந்தர்களை நியமிப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அடங்கிய புதிய சுற்றறிக்கை கடந்த 4 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளரால் கடந்த 15 ஆம் திகதி பத்திரிகைகள் வாயிலாக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி எதிர்வரும் ஜூன் 9 ஆம் திகதி ஆகும்.

இந்நிலையில், சுற்றறிக்கையின்படி துணைவேந்தர் பதவிக்குப் பொருத்தமானவர்களை அடையாளங்கண்டு, அவர்களைத் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பிக்க ஊக்குவிக்கும் வகையிலேயே பேரவையினால் தேடற்குழு நியமிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# கொரோனா வைரஸின் மையமாக தென்னமெரிக்கா மாறும் அபாயம்

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

(ஜெனிவா)

கொவிட்-19 வைரஸ் பரவலின் புதியமையப்பகுதியாக தென்னமெரிக்கா மாறும் அபாயம் இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

நோய்த்தொற்றினால் பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கை தென்னமெரிக்காவில் அதிகரித்து வருகிறது.

இதனால் வைரஸ் தாக்கத்தின் மையப்பகுதியாக தென்னமெரிக்க நாடுகள் மாறக்கூடும் என உலக சுகாதார அமைப்பின் அவசர செயற்பாடுகளுக்கான பணிப்பாளர் மைக் ரயான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னமரிக்க நாடான பிரேசிலில் நோய்த் தொற்று தீவிரமடைந்து வருகிறது.

அந்நாட்டில் இதுவரை 3 இலட்சத்து 32 ஆயிரத்து 382 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். 21 ஆயிரத்திற்கும் அதிகமான உயிரிழப்புக்களும் ஏற்பட்டன.

குறித்த நாட்டில் நோய்த் தொற்றை அடையாளம் காண்பதற்கான மருத்துவ பரிசோதனைகள் குறைவாக உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# மாகாணங்களுக்கு இடையேயான பேருந்து சேவைகள் ஆரம்பம்

(கொழும்பு)

சுகாதாரப் பிரவினரின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் உடனடியாக மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து சேவைகளை முன்னெடுக்க எதிர்பார்ப்பதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் மாகாணங்களுக்கு இடையேயான பேருந்து சேவைகளை இயக்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையேயான பேருந்து சேவைகள் தொடர்பாக போக்குவரத்து அமைச்சருக்கு ஒரு திட்டம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் இதற்கு அனுமதி கிடைக்கும் பட்சத்தில் உடனடியாக மாகாணங்களுக்கு இடையேயான பேருந்து சேவைகளை முன்னெடுக்க எதிர்பார்ப்பதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்க தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (ஜ-4)

# இராசிபலன்

24.05.2020
வைகாசி 11, ஞாயிற்றுக்கிழமை
துதியை பின்னிரவு 12.53 மணிவரை
மிருகசீரிடம் முழுவதும்
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
சந்திராஷ்டமம்- விசாகம் வளவன்

**மேஷம்**: உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**: மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்**: குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் சில நிகழ்வுகள் இடம்பெறலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**கடகம்**: குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்**: குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள்.

**கன்னி**: அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**துலாம்**: பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய வெற்றிக்கு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**விருச்சிகம்**: சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும், ஆரோக்கியக் குறைவான நாள்.

**தனுசு**: வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மகரம்**: உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**கும்பம்**: வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர்கள் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்**: எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், உடல் நலன் சீராகும், தூரதேச செய்திகள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையலாம், வருமானம் பெருக புதிய வழியைக் கையாள்வீர்கள்.

நாம் இழந்துவிட்ட சொர்க்கங்களே உண்மையான சொர்க்கங்கள்

# ஊரடங்கிலும் இரத்ததான முகாம்

(குப்பிழான்)
கீரிமலை கருகம்பனை தமிழ் மன்றம், சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் 12 ஆவது மாபெரும் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை கருகம்பனை கலாசார மண்டபத்தில் இடம்பெறும். இன்று ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் குருதிக் கொடையாளர்கள் இரத்த வங்கி பதிவுப் புத்தகத்தை வீதிப் பாஸ் அனுமதியாகப் பயன்படுத்த முடியும்.

அத்துடன் போக்குவரத்து உதவி தேவைப்படும் குருதிக் கொடையாளர்களுக்கு விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும் எனவும் போக்குவரத்து உதவி தேவைப்படுபவர்கள் 077 324 1755, 077 298 8917 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (5-18)



புனித றம்ழான் நோன்பை முன்னிட்டு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தால் யாழ்.முஸ்லிம்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான விசேட உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன் குறித்த உலர் உணவுத் தொகுதியை கடந்த வியாழக்கிழமை யாழ். சோனக தெருப் பகுதிக்கு நேரடியாகச் சென்று முஸ்லிம் பிரதிநிதிகளிடம் கையளித்தார். (படம்:ரவிசாந்த்)

# வடக்கு மாகாண சுகாதார தேவைகளுக்கான திட்டமொன்றை உடனடியாக தயார் செய்க

## ஆளுநர் பணிப்பு



(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண சுகாதாரத் துறையின் உடனடித் தேவைகளுக்கான முக்கியத்துவத்தின் அடிப்படையில் பூரணப்படுத்தப்பட்ட திட்டமொன்றை தயாரிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் தயாரிக்கப்படும் திட்டத்தினை படிப்படியாக செயற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் காணப்படும் மாவட்ட பொது வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகள், ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையங்கள் ஆகியவற்றின் தற்போதைய நிலைமைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதை அடிப்படையாகக் கொண்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், மாவட்ட பொது வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள் ஆகியோருடனான விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் வடக்கு ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், மாவட்டபொதுவைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள் வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் முன்னெடுக்கப்படும் தற்போதைய செயற்பாடுகள் மற்றும் முகங்கொடுக்கும் சவால்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான பட்டியலை முன்வைத்தனர்.

அவ்விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்திய ஆளுநர், வைத்தியசாலைகளில் உள்ள விடுதிகள், கழிப்பறைகள் மற்றும் பிற பகுதிகள் சுத்தமாக இருக்க வேண்டும். அனைத்து வைத்தியசாலை சுற்றுச்சூழலின் தூய்மையைப் பேணுவதற்கான வழிமுறைகள் வெளியே கொணரப்பட்டு திறம்பட செயற்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர், "நோயாளிகளுக்கு வைத்தியர்களால் வழங்கப்படும் மருந்துப் பட்டியலுக்கு அமைவாக உரிய உணவுகள் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். இதற்காக சுகாதார அமைச்சால் வருடாந்தம் பாரியளவு நிதியும் ஒதுக்கப்படுகிறது.

மேலும் வெளியில் இருந்து வைத்தியசாலைகளுக்குள் உணவைக் கொண்டு வருவதைத் தவிர்க்க வேண்டும். மக்கள் எந்தவித தயக்கமும் இல்லாமல் வைத்தியசாலைகளில் குடிநீர், கழிப்பறைகள் மற்றும் படுக்கைகளைப் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.

வைத்தியசாலைகளில் வசதியான தங்குமிடம் நோயாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும். மருத்துவர்களின் அறிவுறுத்தல்களின்படி முறையான மற்றும் ஆரோக்கியமான உணவு வழங்குவதை உறுதிப்படுத்த சரியான கண்காணிப்பு முறையை செயற்படுத்த வேண்டும்.

வைத்தியசாலைகளின் பழைய கட்டடங்களைப் புனரமைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்யப்படுகின்றபோது வரவு-செலவுத் திட்டத்தினை மீண்டும் சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

சமூகத்தில் பரவும் தொற்றும், தொற்றா நோய்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டி தகவல் மையத்தின் ஊடாக அவை முறையாக பதிவு செய்யப்பட வேண்டும். அத்துடன் அவை குறித்த உரிய கண்காணிப்புக்களை பிரதேச வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள் ஊடாக முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. அத்துடன் தரவுகளைப் பதிவு செய்வதற்காக மாவட்ட செயலக, பிரதம செயலாளரின் அலுவலக ஆளணியினரைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்" எனவும் தெரிவித்தார். இந்நிலையில், ஆளுநரின் இந்த முன்மொழிவுகள் சுகாதாரத்துறையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுமெனவும் உறுதியளிக்கப்பட்டது. (ஐ-4)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: 10¾ செவ் 10 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: பட்டதாரி கணக்காளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10777

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம் 3
கி.பா: 15/16 சூரிசெவ் 11இல்
உயரம்:177cm
தகைமை/தொழில்:B.Sc, B.Eng. (civil). Engineer (civil)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/10781

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 3
கி.பா: 24 செவ் 9 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்: B.Sc, Engineer
எதிர்பார்ப்பு:படித்த பெண்
தொ.இ: B/10782

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 4
கி.பா: 23¾ செவ் 7 இல்
உயரம்: 5'3"தகைமை/தொழில்: Advanced Diploma in Bussiness Management (Singapore). IT
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10784

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா: செவ் 2 இல்
தகைமை/தொழில்: HNDA, தொழில்நுட்ப உத்தியோகத்தர் எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/7847

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: 54 செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.A. Economics Accountant எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7852

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 11 சூரிசெவ் 9 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: வெளிவாரி பட்டதாரி, முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/7859

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா: 24 செவ் 12 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. அரச வங்கி பதவி நிலை ஊழியர்
எதிர்பார்ப்பு: B.Sc பட்டதாரி, வைத்தியர், பொறியியலாளர், விரிவுரையாளர், வங்கியாளர் போன்ற உத்தியோகத்தர்.
தொ.இ: G/7865

கல்யாணமாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு: 021 720 1005, 021 221 5434
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்: - காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை
விடுமுறை தினம்:-ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்


# வெளிநாட்டில் சிக்கிய இந்தியர்களை அழைக்க 'வந்தே பாரத்' செயற்றிட்டம் ஆரம்பம்

(டில்லி)
கொரோனாவின் கோரப்பிடியின் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இந்தியப் பிரஜைகளை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வரும் நோக்கில் "வந்தே பாரத்" எனும் செயற்றிட்டம் இந்திய அரசால் முன்னெடுக்கப்படவுள்ளது. இதனடிப்படையில் இலங்கையிலுள்ள இந்தியப் பிரஜைகளை அழைத்துச் செல்வதற்காக இந்தியாவின் விசாகப்பட்டினத்திலிருந்து ஜலஸ்வா எனும் கப்பல் அடுத்த மாதம் முதலாம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

இலங்கையிலுள்ள தமிழகத்தை சேர்ந்தவர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி ஜலஸ்வா கப்பலின் மூலம் நாடு திரும்ப முடியும்.அத்துடன் எதிர்வரும் 29 ஆம் திகதி இந்திய விமானச் சேவைக்கு சொந்தமான விமானமொன்றும் கொழும்பை வந்தடையவுள்ளது.

"வந்தே பாரத்" செயற்திட்டத்தின் கீழ் உலகளவில் சிக்கி நாடு திரும்ப முடியாது தவிக்கும் இந்தியப் பிரஜைகளை மீண்டும் நாட்டிக்கு அழைத்து வரும் நோக்கிலேயே குறித்த விமான சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

"வந்தேபாரத்" இந்திய வரலாற்றில் முன்னெடுக்கப்படும் பாரிய செயற்றிட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

# 44 பேருக்கு பரிசோதனை எவருக்கும் தொற்றில்லை

(குப்பிழான்)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 44 பேருக்கான ஆய்வுகூடப் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளது. அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்றில்லையெனவும் உறுதிசெய்யப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக பிரிவுக்குட்பட்ட 14 பேர், பம்பை மடு தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 12 பேர், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 7 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட 6 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட 3 பேர், முல்லைத்தீவு பாதுகாப்பு படையினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர், இரணைமடு தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த ஒருவர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-5-18)

# பஞ்சம் பஞ்சாய்ப் பறக்கட்டும்!

## பசில் ராஜபக்ஷ திட்டவட்டம்



**(கொழும்பு)**

**குறைந்த வருமானம் பெறும் 10 இலட்சத்துக்கும் அதிகமான குடும்பங்களின் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்கப்படுத்துவதும் வறுமையை இல்லாதொழிப்பதும் அரசாங்கத்தின் பிரதான இலக்கு என பொருளாதார முன்னேற்ற திட்டமிடல் மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அரசாங்கத்துக்குச் சொந்தமான பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படாத நிலங்களில் விவசாயம், கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டது.

இவ்விடயம் தொடர்பான பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் அலரிமாளிகையில் செயலணியின் தலைவர் தலைமையில் இடம்பெற்றது. இதில் செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்ததாவது,

உணவு உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைய வேண்டுமாயின் விவசாயத்துறை, விலங்கு வேளாண்மை முன்னேற்றமடைய வேண்டும்.

நாட்டில் 10 ஆயிரம் ரூபா மாத வருமானம் பெறும் குடும்பங்கள் 25,573 உம், 10 ஆயிரத்துக்கும் 20 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட வருமானம் பெறும் குடும்பங்கள் 5 இலட்சத்து 68 ஆயிரத்து 715 பேர் உள்ளனர். இவர்கள் அனைவரும் வறுமைக்கோட்டில் உள்ளனர்.

இதற்கமைய நாட்டில் 10 இலட்சத்துக்கும் அதிகமான நடுத்தர குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதும் வறுமையினை இல்லாதொழிப்பதும் அரசாங்கத்தின் பிரதான இலக்காகும். விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தி ஊடாக இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

பிற நாடுகளின் அழுத்தங்கள் இன்றி உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவது, காணப்படும் பௌதீக வளங்களை முழுமையாகப் பயன்படுத்துதல், காலநிலை, மண் வளத்திற்கு அமைய விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்தல், விவசாயத் துறையில் புதிய நவீன திட்டங்களை அறிமுகம் செய்தல் உள்ளிட்ட விடயங்கள் பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 41 பேர் வெளியேற்றம்

(கொழும்பு)

இலங்கை விமானப்படையின் கண்காணிப்பின் கீழ் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த 41 பேர் நேற்று தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வெளியேறினர்.

வெலிசர பகுதியில் உள்ள தனிமைப்படுத்தல் முகாம்களிலேயே இவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாக விமானப்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-4)

# கொரோனாவால் கொழும்பில் சிக்குண்டோர் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டதனால் கொழும்பில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த 1500 பேர் நேற்றுச் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கொழும்பு வடபகுதியில் தற்காலிகமாக தங்கியிருந்தவர்களே இவ்வாறு சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்,

நுவரெலியா, கண்டி, மாத்தளை உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கிற்கு அவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்ட பின்னரே இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 42 பேருந்துகளில் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேல் மாகாணத்தில் நிர்க்கதிக்கு உள்ளாகியிருந்தவர்களில் இதுவரை 16 ஆயிரம் பேர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஜ-8)

# என் முட்டாள்தனமான முடிவினால் இன்னொரு உயிர் போய்விட்டது

## தற்கொலைக்கு முயற்சித்த பெண் உருக்கம்

(தலவாக்கலை)

தலவாக்கலையில் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த பெண் மன்னிப்புக் கோரினார்.

தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த குறித்த பெண்ணை காப்பாற்றுவதற்காக 32 வயதான இளைஞன் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த பெண்ணை பார்ப்பதற்காக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலவாக்கலை வைத்தியசாலைக்குச் சென்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட பெண் தனது தற்கொலை முயற்சிக்காக மன்னிப்புக் கேட்டார்.

"எனது தனிப்பட்ட காரணத்தால் நான் அவசர தீர்மானம் ஒன்றை எடுத்து விட்டேன். இதனால் ஒரு உயிரை இழக்க நேரிட்டுள்ளது. அதற்காக என்னை மன்னித்து விடுங்கள்.

நான் வைத்தியசாலையில் இருந்து வெளியேறியவுடன் என்னால் உயிரிழந்தவரின் குழந்தைகளையும் பார்த்துக் கொள்வேன் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2044

facebook

### வேணுகா

மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்... இன்றைக்கு!! நோய்கள் அண்டாத நம்முடைய தற்காப்பான பழைய வாழ்வியல் முறைகளை!



### சுகஸ்திகா



விட்டுப் போனவர்களை மட்டும் தான்... விடாமல் நினைத்து கொண்டு இருக்கிறது மனசு.


### ஹரிராம்

ஒரு சொல்லில் கவிதை அம்மா என்றால்...



ஒரு சொல்லில் சரித்திரம் என்றால் அது அப்பா...

### சுபாங்கி




### ரவிநாத்

இந்த ஒரு படத்தில் ஓராயிரம் உணர்வுகள் ஒளிந்து இருக்கிறது



கொடுக்கும் இந்த கரத்தில் ஒரு கோடி அர்த்தங்கள் பொதிந்து இருக்கிறது.

### பாலாஜி

இந்த 50 நாளா நாம் Hospital இற்கும் போகல Hotel இற்கும் போகல



இது இரண்டுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை குழப்ப சிலர் முயற்சி

## கர்தினால் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளை குழப்புவதற்கு ஒரு சிலர் முனைவதாக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டினார்.

அமரபுர பீடத்தின் தலைவர் கொட்டுகொட தம்மாவாச தேரரின் உடல்நலம் குறித்து விசாரிப்பதற்காக கொழும்பு பேராயர் நேற்று முன்தினம் அங்கு சென்றிருந்தார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நடைபெற்று வரும் விசாரணைகளைக் குழப்புவதற்கு ஒருசிலர் முயற்சிப்பதாகவும் அதற்கு இடமளிக்காமல் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# தே.அ.அட்டை விண்ணப்ப கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணணப்பப்படிவங்களை விரைவில் சமர்ப்பிக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு நேற்று ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்தல் விடுத்தது.

விண்ணப்பகால எல்லை முன்னரே நிறைவடைந்த நிலையில் நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு விண்ணப்பங்களை ஏற்கும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஜ-8)

# ரம்ழான் பெருநாளை குடும்பத்தினருடன் கொண்டாடுங்கள்

## உலமா சபை கோரிக்கை

(கொழும்பு)

புனித ரம்ழான் பெருநாளை இம்முறை குடும்பத்தினருடன் மாத்திரம் கொண்டாடுமாறு இஸ்லாமியர்களுக்கு ஜம்மியத்துள் உலமா சபை கோரிக்கை விடுத்துள்ளது.

அக்குறணை ஜும்மா பள்ளிவாசலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே குறித்த விடயம் தொடர்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் ஜம்மியத்துள் உலமா சபை மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது கொரோனா அச்சம் காரணமாக சமூக இடைவெளியைப் பின்பற்றுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதனால் பெருநாளை முன்னிட்டு பள்ளிவாசல்களுக்குச் செல்வதை தவிர்த்தல் வேண்டும். அத்தோடு பயணங்கள் செல்வதைத் தவிர்த்து நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என அச்சபை மேலும் தெரிவித்தது. (ஜ-8)

# வானொலி அறிவிப்பாளராக மைத்திரி!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை தனியார் சிங்கள வானொலி ஒன்றில் செய்தி வாசிப்பாளராகவும் அதேபோல அறிவிப்பாளராகவும் செயலாற்றி தனது கருத்துக்களை வெளியிட்டார்.

கொழும்பிலுள்ள தனியார் வானொலியில் நேற்றுக் காலை செய்தி வாசிப்பாளர் ஆசனத்தில் அமர்ந்து செய்திகளை வாசித்த மைத்திரி, அதன் பின்னர் அறிவிப்பாளராகவும் "வானொலியும் நானும்" என்ற தலைப்பில் கருத்துக்களைப் பதிவு செய்தார்.



அண்மைக்காலமாக மைத்திரி மீது கடும் அதிருப்திகளும் கண்டனங்களும் சமூக ஊடகங்களில் வலுத்துவந்த நிலையில், நேற்றுக் காலை முதல் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி குறித்த சிறந்த விடயங்களே அவற்றில் பேசப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# அமைச்சுக்களின் செயலாளராக இராணுவம்? இராணுவ ஆட்சியை உருவாக்குகிறாரா கோட்டா?



## மத்தும பண்டார குற்றச்சாட்டு



(கொழும்பு)

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டில் இராணுவ ஆட்சியை உருவாக்குகிறார் என முன்னாள் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றம்சாட்டினார்.**

நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சுக்களின் செயலாளர்களாக இராணுவ அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் நாட்டில் இராணுவ ஆட்சியை உருவாக்குவதற்கான முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்துக் கட்சிகளும் அணிதிரள வேண்டும்.

சில பதவிகளுக்கு முதல் தடவையாக இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். சுகாதார நீர்ப்பாசன விவசாய மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்களாக இராணுவ அதிகாரிகளே காணப்படுகின்றனர். இதன்மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இவ்வாறான ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் அணிதிரளவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (ஜ-4)

# அவன்கார்ட் வழக்கு விவகாரம்; நிஸங்க விசாரணை ஆணைக்குழுவுக்கு

(கொழும்பு)

அவன்கார்ட் மெரிடைம் சர்விசர்ஸ் தனியார் நிறுவனத்தின் தலைவர் மேஜர் நிஸங்க சேனாதிபதி எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு அரசியல் பழிவாங்கல்கள் குறித்து ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகவுள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்தை முறையற்ற விதத்தில் கையகப்படுத்தியதன் மூலம் ஏற்பட்ட நட்டம் குறித்து நிஸங்க சேனாதிபதியால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள அவர் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டார்.

இதற்கு மேலதிகமாக அமைச்சுக்களின் முன்னாள் செயலாளராகக் கடமையாற்றிய விக்டர் சமரவீர மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் முன்னாள் பதில் செயலாளர் சமன் திஸாநாயக்க ஆகியோர் செய்த முறைப்பாடுகள் தொடர்பிலும் எதிர்வரும் 26 ஆம் திகதி



விசாரணைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஊரடங்கை மீறிய 541 பேர் கைது!

(கொழும்பு)

ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் 541 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேலும் இந்தக் காலப் பகுதியில், 138 வாகனங்களையும் பொலிஸார் பொறுப்பேற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலையடுத்து, கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இந்நிலையில், கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் 62 ஆயிரத்து 162 பேர் கைது செய்யப்பட்டனர் என்பதோடு, 17 ஆயிரத்து 460 வாகனங்களையும் பொலிஸார் பொறுப்பேற்றனர்.

மேலும் ஊரடங்கு உத்தரவை மீறியமைக்காக 18 ஆயிரத்து 992 நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (ஜ-4)

# தமிழரின் இன்றைய நிலைக்கு தமிழ்த் தலைமைகளே காரணம்

## டக்ளஸ் தெரிவிப்பு



(மன்னார்)
தமிழர்களின் பிரச்சினை களுக்கு கடந்த கால தமிழ் தலைமைகளும் தற்போதைய தலைமைகளும் தான் காரண மாக உள்ளனர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரி வித்தார்.

மன்னார் உயிலங்குளம் பிரதான வீதியில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) அலுவலகம் நேற்று சனிக் கிழமை காலை 9 மணியளவில் வைபவ ரீதியாக திறந்து வைக் கப்பட்டது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவா னந்தா குறித்த அலுவலகத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கையிலேயே அமைச்சர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச சமூகம் இலங் கைக்கு அழுத்தம் கொடுக்குமாக இருந்தால் எந்த நாடுகளாக இருந்தாலும் ஜனாதிபதி அதில் இருந்து ஒதுங்குவதாகவே ஜனா திபதி அண்மையில் கூறி இருந் தார்.

இக் கருத்து தமிழ் மக்களை எந்த வகையிலும் பாதிக்கும் என்று நான் நினைக்கவில்லை.

தமிழர்களின் பிரச்சினை களுக்கு கடந்த கால தமிழ் தலைமைகள் தான் காரணமாக உள்ளனர் என நான் நம்புகின் றேன்.

சுமார் 15 வருடங்களுக்கு மேல் ஆயுதப்போராட்டத்தின் முன் அனுபவம், சுமார் 30 வருடங்களுக்கு மேல் ஜனநாயக வழி முறையிலான அனுபவங் கள் இருக்கின்றன.

இந்த அனுபவங்களின் ஊடா கவே நான் கூறுகின்றேன்.

தமிழ்த் தலைமைகள் தான் தமிழ் மக்களின் பிரச்சினை களை தீரா பிரச்சினைகளாக கொண்டு சென்றுள்ள னர்.

மேலும் இதுவரை இலங் கையில் கைதுசெய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் தொடர் பாகவும் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீன வர்களின் விடுதலை குறித்து ஊடகவியலாளர்களினால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதன் போது பதில் அளித்த அமைச்சர்,

கொரோனா பிரச்சினை காரணமாக வெளியில் இருந்து செல்வோருக்கான போக்குவர த்துக்கள் தடை செய்யப்பட்டு ள்ளன. இந்த மாதக் கடைசியில் இந்தியாவில் இருந்து விசேட கப்பல் ஒன்று இலங்கைக்கு வர வுள்ளது.

அதில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்து அனுப்பிவைப் பதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித் தார். மேலும் இந்தியாவில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள இலங்கை மீனவர்களையும் நாட்டிற்கு அழைத்து வர நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக அமைச்சர் மேலும் தெரி வித்தார். (2-5-285)

# அபாய வலயங்களிலிருந்து சொந்த இடங்களுக்கு திரும்பிய மக்கள்

(குருமன்காடு)
கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக இலங்கையில் சில மாவட்டங்கள் அபாய வலயங் களாக பிரகடனப்படுத்தப்பட்டு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

அப்பகுதிகளில் சிக்கியுள்ள வெளிமாவட்டங்களைச் சேர்ந்த வர்களை அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக் கும் நடவடிக்கையில் ஒரு தொகு தியினர் நேற்று முன்தினம் இரவு வவுனியாவிற்கு அழைத்து வரப்பட்டனர்.

இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தில் வவுனியா, மன்னார் மாவட் டத்தைச் சேர்ந்த 25 இற்கும் மேற்பட்ட மக்கள் அபாய வலயங் களிலிருந்து அழைத்து வரப்பட்டு அந்தந்தப் பகுதி பொலிஸ் நிலை யத்தில் பதிவினை மேற் கொண்ட பின்னர் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட னர். (2-5-250)



வவுனியா மாங்குளம் பகுதியில் நேற்று காலை வீசிய பலத்த காற்றின் காரணமாக தென்னை மரம் விழுந்ததில் வாகனம் திருத்துமிடம் சேதமடைந்துள்ளது. (படம்:- குருமன்காடு செய்தியாளர்)

# வெலிசர கடற்படை முகாமைச் சேர்ந்த 276 கடற்படையினர் தனிமைப்படுத்தப்பட்டனர்

(வவுனியா)
வெலிசர கடற்படை முகா மைச் சேர்ந்த 276 கடற்படை வீரர்களை தனிமைப்படுத்தலுக் காக வவுனியா பம்பைமடு மற் றும் பெரியகட்டு தனிமைப்படுத் தல் முகாமிற்கு நேற்று முன் தினம் இரவு 17 பேருந் துகளில் அழைத்து வரப்பட்ட னர்.

வெலிசர கடற்படை முகா மைச் சேர்ந்த 500 இற்கு மேற் பட்ட கடற்படை வீரர்களுக்கு கொரோனாத்தொற்று ஏற்பட்டுள் ளதையடுத்து, அம்முகாமைச் சேர்ந்த கடற்படை வீரர்கள் பலர் கொரோனா பரிசோதனைக்காக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக 17 பேரு ந்துகளில் அழைத்து வரப்பட்ட கடற்படையினர் வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் இராணுவ முகாமில் 174 பேரும், வவுனியா பெரியகட்டு கடற்படை முகாமில் 102 பேரும் தனிமை ப்படுத்தப்பட்டுள்ளனர். (2-5)

# மேலும் இருவருக்கு கொரோனா!

(பனிக்கன்குளம்)
கேப்பாபிலவு விமானப்படை தளத்தில் தனிமைப்படுத்தலில் இருந்தமேலும் 2 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டுள் ளது.

முல்லைத்தீவு - கேப்பா பிலவு, விமானப்படைத்தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கடற் படையினர் இருவருக்கு கொரோ னாத் தொற்று இருப்பது பரிசோ தனைகளின் மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக கடந்த வியா ழக்கிழமை உறுதிப்படுத்தப் பட்டது.

ஏற்கனவே ஆறு பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறு திப்படுத்தப்பட்டது.

தொடர்ந்து நேற்று மேலும் 2 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள் ளது.

இவ்வாறு கொரோனா தொற்று இருப்பதாக இனங் காணப்பட்ட இரு கடற்படையின ரும் வெலிக்கந்த மருத்துவ மனைக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தலுக்காக வெலிசறையிலிருந்து கேப்பா பிலவு விமானப்படைத்தளம் உள்ளிட்ட தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அண்மை யில் 400 கடற்படையினர் கொண்டு வரப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் தியர் எஸ். சுகந்தன் தெரிவித் தார். (2.5.281)

# பெருநாள் தினத்தில் மட்டுமாவது பள்ளிவாசல் ஒலிபெருக்கிகளில் 'தக்பீர்' முழங்க வேண்டும்

## அசாத் சாலி கோரிக்கை



(கொழும்பு)
பெருநாள் தினத் தின் சிறப்பு. தனித்து வத்தை வெளிப்படுத்த பள்ளிவாசல் ஒலிபெருக் கிகளில் 'தக்பீர்' சொல் வதற்கான ஏற்பாடு களை அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா சபை மேற்கொள்ள வேண்டுமெனவும் இதற்கான அனுமதியை முஸ் லிம் சமய கலாசாரத் திணைக் களம் வழங்க வேண்டுமெனவும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல் மாகாண சபையின் முன்னாள் ஆளுநரு மான அசாத் சாலி வேண்டு கோளை முன்வைத்தார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்றைய தினம் ஊடகங்க ளுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், "கொரோனா வைரஸின் பரவலால் இரண்டு மாதங்களுக்கு மேலாக பள்ளி வாசல்கள் மூடப்பட்டு, எமது வணக்க வழிபாடுகள் வீடுகளுக் குள் மட்டுப்படுத்தப்பட்டிருந் தன.

இதனால் சமூக, சமய உண ர்வுகள், ஒற்றுமை களிலிருந்து தூரமானதான மன நிலைக்குள் முஸ்லிம்கள் தள்ளப்பட்டனர்.

இன்னும் எத்தனை மாதங்களுக்கு எமது வழி பாடுகள் வீடுகளுக்குள் முடங்கும் என்பதைக் கூற முடியாதுள்ளது.

எனவே, மீண்டும் இந்த உணர்வுகள், ஒற் றுமைகளில் ஒன்றி ணைய பெருநாள் தினத்தில் மட்டுமாவது பள்ளிவாசல் ஒலி பெருக்கி களில் 'தக்பீர்' சொல்லப்பட வேண்டும்.

துஆ பிரார்த்தனைகளும் இடம்பெற வேண்டும். இதன் மூலம் இந்த 'தக்பீர்' சத்தத்தை செவிமடுத்தவாறு, வீடுகளில் தொழவும் வழி ஏற்படும் என அவர் மேலும் தெரிவித் தார். (ஜ-4)

# பொருளாதாரத்தில் மீண்டெழ இலங்கைக்கு இந்தியா உதவும்

## மோடி உறுதி

(கொழும்பு)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் தனக்கும் இடையில் தொலைபேசியில் உரையாடல் இடம்பெற்றதாக இந்தியப் பிரதமர் மோடி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத் தில் குறிப்பிட்டார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ள தாவது, இலங்கை ஜனாதிபதியு டன் சிறப்பான முறையில் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத் ததாகவும் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவின் தலைமை த்துவத்தின் கீழ் இலங்கை மிகச் சிறந்த முறையில் கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு எதிராகப் போராடுகிறது.

இலங்கை எமது அயல்நாடு என்ற வகையில் வைரஸ் தாக்கம் மற்றும் பொருளாதாரத் தாக்கத்திலிருந்து இலங்கை



மேலெழுவதற்கு இந்தியா பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தியாவின் உதவியுடன் இலங்கையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்தவும் முதலீட்டு தொடர்புகளை மேலும் வலுப்படுத்தவும் இந்த கலந் துரையாடலின் போது இணக் கப்பாடு ஏற்பட்டதாக இந்தியப் பிரதமர் மோடி மேலும் குறிப்பி ட்டார். (ஜ-2)

# ஆப்கானில் 14பேர் சுட்டுக்கொலை!



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவ வீரர்கள் நடத்திய தாக்குதலில் தலிபான் பயங்கரவாதிகள் 14 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் இராணுவ முகாம்கள், சோதனைச் சாவடிகள் உள்ளிட்டவற்றை குறிவைத்து தலிபான் பயங்கரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானின் வடக்கு மாகாணம் படாக்சானில் யப்தல் இ பாலா மாவட்டத்திலுள்ள இராணுவ முகாம் மீது நேற்று தலிபான் பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். மோட்டார் சைக்கிள்களில் வந்த பயங்கரவாதிகள் இராணுவ முகாமை சுற்றிவளைத்து துப்பாக்கியால் சுட்டும், கையெறி குண்டுகளை வீசியும் தாக்குதலில் ஈடுபட்டனர்.

எனினும் உடனடியாக சுதாகரித்துக் கொண்ட இராணுவ வீரர்கள் தங்களுடைய துப்பாக்கிகளால் பயங்கரவாதிகளுக்கு தக்க பதிலடி கொடுத்தனர். இருதரப்புக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சமர் நடந்தது. பல மணி நேரம் நீடித்த இந்தச் சமரின் இறுதியில் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகள் 14 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். (ஜ-4)

# இன்றும் நாளையும்

# நாடு முழுவதும் சோதனைச்சாவடிகள் அமைக்கப்படும்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஊரடங்கு உத்தரவு இன்றும் நாளையும் அமுலில் உள்ள நிலையில் நாடு முழுவதும் 900 இற்கும் மேற்பட்ட சோதனைச் சாவடிகள் அமைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தவகையில் விசேட கடமை நேரத்தின் அடிப்படையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் விசேட ரோந்து நடவடிக்கைகளும் இருக்கும் எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

அதன்படி எதிர்வரும் 2 நாட்களில் வீதிகளில் நடமாடும் பொது மக்கள் மற்றும் வாகனங்கள் சோதனைச் சாவடிகளில் மறிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு ரம்ழான் தினம் குறித்து கருத்து தெரிவித்த அவர், வீடுகளுக்குள் பண்டிகையை கொண்டாடுமாறும் கேட்டுக் கொண்டார்.

இதனை மீறி ஒன்று கூடுபவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தை மீறியதாகக் கருதப்படுவார்கள் என்றும் அவர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

எனவே கடந்த மாதங்களில் ஊரடங்கு விதிமுறைகளை பின்பற்றியதைப்போலவே எதிர்வரும் இரண்டு நாட்களிலும் நடந்து கொள்ளுமாறும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மக்களிடம் மேலும் கேட்டுக்கொண்டார். (ஜ-4-8)

# இந்தியாவை அச்சுறுத்தும் கொரோனா ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேர் பாதிப்பு



(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை கடந்துள்ளது.

இதன்படி கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 24 ஆயிரத்து 794 ஆக அதிகரித்துள்ளது. புதிதாக 6,568 பேர் கண்டறியப்பட்டனர்.

அத்துடன் 142 பேர் உயிரிழந்துள்ளதுடன் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 726 ஆக உயர்வடைந்துள்ளது.

இதுவரை 51 ஆயிரத்து 824 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளதுடன் 69 ஆயிரத்து 244 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஜ-4)

# பாடசாலைகள் ஆரம்பிக்கமுன் விசேட செயற்திட்டம் ஆரம்பம்

## கல்வி அமைச்சர் டளஸ்



(கொழும்பு)

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்துப் பாடசாலைகளிலும் வெப்ப நிலையைக் கண்டறியும் சாதனங்கள், கைகளை சுத்தம் செய்வதற்கான வசதிகள் மற்றும் விசேட அறைகள் ஆகியவை அமைக்கப்படும் எனக் கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இதற்காக 200 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு 30 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இந்த வசதிகளை நிறுவுவதற்கு சுமார் 680 மில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பெற்றோர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்று சில தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ள கூற்றுக்கள் தவறானவை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு மாணவர்களின் பெற்றோருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், இந்த பாடசாலைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்தும் போது பெற்றோரிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4-8)

# ரஷ்யாவை பின் தள்ளியது பிரேஸில் ஒரேநாளில் 20 ஆயிரம் பேர் பாதிப்பு



(ரியோ டி ஜெனிரோ)

பிரேஸில் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் ஒரே நாளில் 20 ஆயிரம் பேர் பாதிப்பு அடைந்தனர்.

உலகம்முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 53 இலட்சத்தை நெருங்கி வருகிறது.

இந்நிலையில் சிகிச்சை பெறுபவர்களில் 44 ஆயிரத்து 582 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

ஆனாலும், இந்த கொடிய வைரஸிற்கு உலகம் முழுவதும் இதுவரை 3 லட்சத்து 39 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரஸ் தற்போது உலகின் 210 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு பரவியுள்ளது.

ஐரோப்பிய நாடுகளைப் புரட்டி எடுத்த கொரோனா கடந்த சில மாதங்களாக அமெரிக்காவில் கோரத்தாண்டம் ஆடிவருகிறது.

உலகளவில் வைரஸ் பரவியவர்கள், உயிரிழந்தோர் எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்திலுள்ளது.

ஆனால், தற்போது இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பிரேஸிலில் கொரோனாவின் தாக்கம் தீவிரமடைந்து வருகிறது.

பிரேஸில் நாட்டில் ஒரே நாளில் சுமார் 20 ஆயிரம் பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் அங்கு இதுவரை 3 இலட்சத்து 30 ஆயிரத்து 890 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வைரஸ் தாக்குதலுக்கு அங்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 21 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

அமெரிக்காவைத் தொடர்ந்து கொரோனாவுக்கு அடுத்ததாக பிரேஸில் மாறி வருகிறது. இதனால் அந்நாட்டு மக்கள் அச்சமடைந்துள்ளனர். (ஜ-2-5)

# ரஷ்யாவிலிருந்து 260 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பல நாடுகளிலும் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ரஷ்யாவின் மொஸ்கோவில் சிக்கித்தவித்த 260 பேர் விசேட விமானம் மூலம் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸிற்குச் சொந்தமான விசேட விமானம் மூலம் குறித்த 260 பேரும் ரஷ்யாவின் மொஸ்கோவிலிருந்து அழைத்து வரப்பட்டனர்.

நேற்று அதிகாலை குறித்த விமானம், 260 இலங்கையர்களுடன் கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியது.

இந்நிலையில் நாடு திரும்பிய அனைவரையும் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்க ஜனாதிபதி செயலணி உருவாக்கம்

(கொழும்பு)

**கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை முறையாக மதிப்பீடுசெய்து பாதுகாப்பதற்கு பாதுகாப்புச் செயலாளரின் தலைமையில் ஜனாதிபதி செயலணியொன்றை அமைப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அழிவடைவது குறித்து பல்வேறு தரப்பினர் விடயங்களை முன்வைத்து வருகின்றனர்.



இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மையப்படுத்தி அவற்றைப் பாதுகாக்கும் விரிந்த நிகழ்ச்சித்திட்டமொன்றை தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்துவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வெள்ளிக்கிழமை ஒன்றுகூடும் பௌத்த ஆலோசனை சபை இரண்டாவது தடவையாக நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஒன்றுகூடியது.

இங்கு மகாசங்கத்தினரிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பௌத்த சமயத்திற்கும் திரிபீடகத்திற்கும் முரணாக சில பிக்குகளின் செயற்பாடுகள் உள்ள காரணத்தினால்பௌத்த சாசன உரையாடலொன்றின் தேவை குறித்து மகா சங்கத்தினர் விரிவாக ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினர்.

அதுபற்றி மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பித்தால் தனது பதவிக் காலத்தில் அதற்குத் தேவையான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

உலகின் அனைத்து நாடுகளும் கொவிட்-19 நோய்த்தொற்றினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டின் அனைத்து மக்களையும் பாதுகாத்து ஜனாதிபதி மேற்கொண்டு வரும் பணியை மகாசங்கத்தினர் பாராட்டினர்.

ஏப்ரல் 30ஆம் திகதிக்கு பின்னர் சமூகத்தில் எந்தவொரு கொவிட் நோய்த் தொற்றுடையவரும் கண்டறியப்படாமை சுகாதார மற்றும் பாதுகாப்புத் துறைக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும் என ஜனாதிபதி மகாசங்கத்தினரிடம் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்து வருவோர் நோய்த்தடுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் குவைத் மற்றும் டுபாய் நாடுகளில் இருந்து வருகை தந்த சிலர் கொவிட் நோய்த்தொற்றுக்கு ஆளாகியிருந்தனர்.

நாட்டுக்கு வருகை தருவோர் தொடர்பில் சுகாதார ஆலோசனைகளுக்கு ஏற்ப பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரிவெனா மற்றும் பாடசாலைக் கல்வித் துறையின் தற்போதைய நிலை குறித்து பௌத்த ஆலோசனை சபை விரிவாகக் கலந்துரையாடியது.

நாடெங்கிலும் பரவியுள்ள போதைப்பொருள் பிரச்சினையை ஒழிப்பதற்கு விரிவான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மகாசங்கத்தினர் வலியுறுத்தினர். இந்த விடயத்தில் அரசாங்கத்திற்கும் மகாசங்கத்தினருக்கும் பாரிய பொறுப்பு உள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்கு ஜனாதிபதி பதிலளிக்கையில், கடந்த குறுகிய காலப் பகுதியில் நாட்டினுள் கொண்டு வரப்பட்ட பெருந்தொகை போதைப் பொருட்களை கைப்பற்ற முடிந்திருப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலைமையை முழுமையாகக் கட்டுப்படுத்தி போதைப் பொருள் பிரச்சினையை முற்றாக ஒழிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அனைத்து தீவிரவாத, பயங்கரவாதக் குழுக்கள் குறித்தும் விசாரணை செய்வதற்கு பாதுகாப்புத் தரப்புக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ஜ-4)

# இலங்கை சுகாதாரக் கொள்கை தொடர்பில் யுனிசெப்-ஐக்கிய மக்கள் சக்தி கலந்துரையாடல்

(கொழும்பு)

யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி ரிம் சுட்டொனுக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் இடையில் நேற்று முன்தினம் கொழும்பில் விசேட சந்திப்பொன்று இடம் பெற்றது.



இச்சந்திப்பின் போது நவீன விஞ்ஞானபூர்வ சுகாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் இலங்கையைக் கட்டியெழுப்புவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

நோய் நிவாரணம், நோய்க்கான சிகிச்சைமுறைகள், தேசிய போசணைக் கொள்கை, சிறுவர் சுகாதாரம், மருத்துவமனைக் கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டதுடன், அதனுடன் தொடர்புடைய வகையில் சுகாதாரக் கொள்கையைத் தயாரிப்பதற்கான பொறுப்பு முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன உள்ளடங்கலாக துசிதா விஜேமான்ன, காவிந்த ஜயவர்த்தன அடங்கிய குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

விஞ்ஞானபூர்வ அடிப்படையில், உரிய தரவுகள் மற்றும் ஆதாரங்களுடனான முறையான கொள்கைத்திட்டமொன்றை யுனிசெப் அமைப்பின் யோசனைப்படி தயாரிப்பதற்கு சஜித் பிரேமதாஸ ஆலோசனை வழங்கினார். (ஜ-4)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஆழ்மனப் பூசல்!

ஒரு ஏழை விவசாயி. எங்கேயோ வெளியில் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அந்தச்சமயம் பார்த்து சிறுவயது சிநேகி தன் ஒருத்தன் அவனைப் பார்ப்பதற்காக வந்தான். ``சிறிது நேரம் வீட்டிலே உட்காரு. சில நண்பர்களைப் பார்த்துவிட்டு வருகிறேன். பின்பு நாம் சாவகாசமாக பேசுவோம் என்றான்.

நானும் உன்னுடன் வருகிறேன். ஆனால் அதற்கு நீ ஒரு உதவி செய்யவேண்டும் என்றான் அவன். என்ன? என்று கேட்டான் இவன்.

``என்னுடைய உடை நன்றாக இல்லை. அழுக்காக இருக்கிறது. உன்னிடம் விலையுயர்ந்த ஆடைகள் ஏதாவது இருந்தால் தா. அதை போட்டுக்கொண்டு வருகிறேன். திரும்பி வந்ததும் கொடுத்து விடுகிறேன் என்றான். அவன் பார்த்தான். சிறிது காலத்துக்கு முன்பு ராஜா அவனுக்குப் பரிசாக கொடுத்த விலை உயர்ந்த ஆடைகள் பெட்டியில் இருந்தன. அதை எடுத்துக் கொடுத்தான். இவன் வாங்கிப் போட்டுவிட்டான். பார்ப்பதற்கு ராஜா மாதிரி இருந்தான் நண்பன்.

உடைகடன் கொடுத்த இவன் நண்பனே இவன் தோற்றத்தைப் பார்த்துப் பொறாமைப்பட ஆரம்பித்தான். ``என்ன இது இவன் என்னுடைய உடையைவாங்கிப்போட்டிருக்கிறான். அவனைப்பார்த்தால்ராஜா மாதிரி இருக்கிறான். என்னைப் பார்த்தால் அவனுக்கு வேலைக்காரன் போல் தெரிகிறது. இந்த உடையை அவனிடம் கொடுத்தது தவறாக போய்விட்டதே என்று நினைத்தான்.

அவனுக்குள்ளேயே இன்னொரு மனது.. இந்த கோட்டிலும் தலைப்பாகையிலும் என்ன இருக்கு என்று யோசித்தான். ``இவன் நமக்கு நல்ல நண்பன். அவனுக்கு நாம் இதைக்கூட செய்யக் கூடாதா? என்று நினைத்தான்.

மனதுக்குள் ஒரு விவாதம் நடக்கிறது. இருந்தாலும் அந்த உடை தான் அவன் மனதிலே அதிக இடத்தைப் பிடித்தது.

அவர்கள் பார்க்க வேண்டிய நண்பன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அவனிடம் இவன் சொல்கிறான். ``இவன் என்னுடைய பால்ய நண்பன். கூட அழைத்துக்கொண்டு வந்தேன். ரொம்ப நல்லவன். அவன் போட்டிருக்கானே உடை அது என்னுடையது'' என்றான்.

நண்பனுக்கு அதிர்ச்சி. இவனும் அதற்குப் பிறகு தான் யோசித்தான். ``உடை விடயத்தை சொல்லியிருக்க வேண்டியதில்லை'' என்று. நண்பனிடம் மன்னிப்புக்கேட்டான். இனி மேல் எச்சரிக்கையாக இருப்பேன் என்றான். உடை என்னுடையது உன்னுடையது என்று சொல்லக்கூடாது என்று முடிவு எடுத்தான். இரண்டு பேரும் இன்னொருத்தர் வீட்டுக்குப் போனார்கள். அங்கே அறிமுகத்தை ஆரம்பித்தான்.

``இவன் என்னுடைய பால்ய நண்பன். கூட அழைத்துக் கொண்டு வந்தேன். ரொம்ப நல்லவன். அப்புறம் ஒரு முக்கியமான விடயம். அவன் போட்டிருக்கும் உடை அவனுடையது தான். என்னுடையது இல்லை ''என்றான்.

இது முதலில் சொன்னதை விட மோசம். இரண்டு பேரும் வெளியிலே வந்தார்கள். ``என்னை மன்னித்துக்கொள் எச்சரிக்கையாக தான் இருந்தேன். வாய் தவறி உளறி விட்டேன். இனி மேல் உன்னை அறிமுகப்படுத்தும் போது இந்த உடை விடயத்தை சொல்லவே வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டேன் என்றான்.

அந்த இரண்டு பேருமாக சேர்ந்து மூன்றாவதாக ஒருத்தர் வீட்டுக்குப் போய் சேர்ந்தார்கள். அங்கே இவன் மிகவும் கவனமாக அறிமுகப்படுத்த ஆரம்பித்தான். ``இவன் என்னுடைய பால்ய நண்பன். கூட அழைத்துக்கொண்டு வந்தேன். ரொம்ப நல்லவன். அப்புறம் அந்த உடை விடயம் தானே. மன்னித்துக் கொள்ளுங்கள். அதைப்பற்றி நான் எதுவும் சொல்ல மாட்டேன். ஏனென்றால் சொல்லமாட்டேன் என்று நான் சபதம் எடுத்திருக்கிறேன் என்றான்.

இது எல்லாவற்றையும் விட மோசம்! இந்தக் கதையை கொஞ்சம் ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது பலவீனங்கள் எதுவோ அதுவே நாமாக இருக்கிறோம். ஆனால் நம்முடைய பலவீனங்களை அடக்குவதற்கு தீர்மானிக்கின்றோம். அதனால் இயற்கையாகவே அது நமது ஆழ்மனதிலே பூசல்களுக்கு மூல காரணம் ஆகிறது.

நான் துறவியாக இருக்கப்போகிறேன் என்று ஒருத்தன் குரலை உயர்த்திச் சொல்கிறான் என்றால் அதற்கு நேர் எதிரான எண்ணம் அவனுக்குள்ளேயே இருந்து தாங்க முடியாமல் வெளியிலே வருகின்றது என்று அர்த்தம் என்றார் ஓஷோ.

இந்தக்கால துறவி ஒருவர் தன்னுடைய சிஷ்யனுக்குவாயை ஒரு துணியாலே இறுக்கிக் கட்டி வைத்திருந்தார். ``எதற்கு இப்படி உங்கள் சீடருக்கு மௌனத்தின் மகிமையை உணர்த்துவதற்காகவா இப்படிச் செய்து வைத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

``அட நீங்கள் வேறு. அவன் இன்றிலிருந்து என்னைப் பற்றிய உண்மைகளைப் பேசப் போவதாக சபதம் எடுத்திருக்கிறான். அதற்காகத்தான் அவன் வாயிலேயே துணியைத் திணித்து கட்டிப் போட்டிருக்கிறேன் என்றார் அந்த குரு.

# வீட்டுத்தோட்டங்களில் மிளகு நடுகை செய்து பயனடைவோம்

இலங்கை மக்கள் அனைவராலும் வாசனைத் திரவியமாகவும், மருத்துவப்பொருளாகவும் பயன்படுத் தப்பட்டு வரும் மிளகுப்பயிரானது இற்றைக்கு 3000 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. இப்பயிரின் தோற்று வாயாக இந்தியா விளங்குகின்றது. கிழக்கு ஆசியா, வடக்கு அமெரிக்க நாடுகளில் ஏற்றுமதிப்பயிராகவும் இலங் கையில் சிறு ஏற்றுமதிப்பயிராகவும் காணப்படுகிறது. இலங்கையில் மிளகுப் பயிரானது மாத்தளை, கண்டி, கேகாலை, பதுளை, இரத்தினபுரி, மொனராகலை, குரு நாகல் ஆகிய மாவட்டங்களில் 42,989ha நிலப்பரப்பில் செய்கை பண்ணப்படுகின்றது. அதேவேளை யாழ். குடாநாட்டில் வீட்டுத்தேவைகளுக்காக சில வீட்டுத்தோட் டங்களில் இப்பயிர் கலப்புப்பயிராக நாட்டப்பட்டுள்ள போதி லும் பெரும்பாலான வீட்டுத்தோட்டங்களில் இப் பயிர் நடப் படுவதில்லை. இதற்கு மிளகு நாற்றுக்களை பெற்றுக்கொள் வதில் உள்ள சிரமம், பராமரிப்பு சம்பந்தமான தொழில்நு ட்ப அறிவின்மை போன்றன காரணங்களாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பொருளாதார ரீதியாக விலையுயர்ந்த பொருளாக மிளகு காணப்படு கிறது. ஒவ்வொரு வீட்டிலும் மாதமொன்றிற்கு சராசரி யாக 100g எனும் அடிப்படையில் வருடத்திற்கு 1200 - 1500g மிளகு நுகரப்படுகின்றது. இதைக் கருத்திற் கொண்டு மிளகுத்தேவையை பூர்த்தி செய்யும் நோக்க மாக மிளகினை வீட்டுத்தோட்டங்களில் நடுகை செய்து பயனைப்பெறுவதற்குரிய சிறந்த வழிமுறைகளை தரும் நோக்குடன் இச்செய்தி அமைகிறது.

பெப்பரேசியே (Piperaceae) குடும்பத்தைச் சேர்ந்த பல்லாண்டு ஏறித்தாவரமான (Climbers) மிளகு பெப்பர் நைகிறம் (Piper nigrum) என்ற தாவரவியல் பெயரி னால் அழைக்கப்படுகின்றது. இது நிழலை விரும்பும் பயிராக இருப்பதால் கலப்புப் பயிராக நடுகை செய்யலாம். இதற்குரிய பொருத்தமான காலநிலையாக வெப்ப நிலை $24^0$Cஆகவும், வளிமண்டல ஈரப்பதன் 80% ஆகவும் இருத்தல் அவசியமாகும். எனினும் நல்ல நிழலினை வழங்கக்கூடிய பலா, மா போன்ற மரங்களில் மிளகுப் பயிரினை படரவிடும் போது இப்பயிருக்கு தேவைப்படும் சிறப்பு வெப்பநிலையையும் ஈரப்பதனையும் வழங்கக் கூடியதாகவிருக்கும்.



இலங்கையில் பனியூர், குச்சின், MB12, GK49, உள்ளூர் இனங்களும் செய்கை பண்ணப்படுகின்றன. இருந்தபோதும் உள்ளூர் இனங்களே எமது காலநிலைக்கு மிகவும் பொருத்தமானதாக காணப்படுகின்றது. ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் இன்கிரிரால, கும்புரரால, பூட்டாவரால எனும் மூன்று புதிய இனங்களை அண்மை யில் அறிமுகம் செய்துள்ளன. இப் பயிருக்கான நடுகைப் பொருள் வெட்டுத்துண்டங்கள் ஆகும்.

### நடுகைப்பொருளான வெட்டுத்துண்டம் பெறலுக்கான தாய்த்தாவர தெரிவு

வெட்டுத்துண்டங்களை பெறுவதற்கு தெரிவு செய்யும் தாவரம் கீழ்வரும் இயல்புகளை கொண்டிருக்க வேண்டும்.

❖ ஆரோக்கியமான, வீரியமுள்ள, சிறந்த பற்றிப் பிடிக்கும் ஆற்றல் உள்ளவை

❖ தாராளமான பக்கக்கிளைகளை உருவாக்குவது டன் கணு இடைவெளி சிறிதாகவும் இருத்தல்.

❖ 5-7 கணுக்கள் 25செ.மீ. நீளமுள்ள கிளையில் காணப்படல் வேண்டும்.

❖ எல்லா அல்லது பெரும்பாலான கணுக்களில் பழக்குலைகள் தோன்றுதல்

❖ 15செ.மீ இலும் கூடிய நீண்ட பழக்குலைகளாக இருத்தல்

❖ உருண்டையான பழங்களாக இருத்தல்

❖ நோய் பீடைதாக்கமற்றதாக இருத்தல்

❖ வருடத்திற்கு வருடம் சீரான உயர் விளைச்சலை கொண்டிருக்க வேண்டும்.

❖ ஒழுங்கற்ற முறையில் காய்க்கும் கொடிகளை தெரிவு செய்யக்கூடாது.

தண்டின் நுனிப்பகுதி, பக்கக் கிளைகளிலிருந்து பெறப் படும் துண்டங்கள் மற்றும் தண்டின் அடிப்பக்கத்திலுள்ள ஓடிகள் நடுகைப்பொருளாக பயன்படுத்தப்படுகின்றது.

இருப்பினும் தண்டின் நுனிப்பகுதியும் தண்டின் அடிப் பக்கத்திலுள்ள ஓடிகளுமே நடுகைக்கு பொருத்தமானது.

### வெட்டுத்துண்டங்களைப் பெறும்போது கருத்திற்கொள்ளவேண்டியவை

❖ பழங்கள் அறுவடை செய்யப்பட்ட பின்பு தாய்த் தாவரத்திலிருந்து வெட்டுத்துண்டங்களை பெறவேண்டும்.

❖ ஒவ்வொரு துண்டமும் 2-3 கணுக்கள் கொண்டதா கவும் ஒரு இலை உடையதாகவும் இருத்தல் வேண்டும்.

### நடுகை செய்தல்

❖ நிழலான இடத்தை தெரிவு செய்தல்

❖ நடுகை இடைவெளி -2.5x2.5m அல்லது 7 $^{1/2}$' X 7$^{1/2}$'

❖ நடுகைக்குழி 1$^{1/2}$' X1$^{1/2}$'X 1$^{1/2}$' அளவில் அமைக் கப்பட வேண்டும்.

❖ கூட்டெரு, மேல்மண் என்பவற்றை 1:1 என்ற விகித்த தில் கலந்து தயாரிக்கப்பட்ட ஊடகத்தினால் நடுகைக் குழியை நிரப்பி நாற்றினை நடுகை செய்தல்

❖ நடுகைசெய்தவுடன் நிழல்வழங்கப்படல்முக்கியமானது.

❖ மண் ஈரப்பதனை பேணுவதற்காக தென்னம்பொச்சு, உமி, காய்ந்தபுற்கள் போன்றவற்றை நடப்பட்ட மிளகுத் தாவ ரத்தின் அடிப்பகுதியை சுற்றி பத்திரக்கலவையாக இடல்.

❖ நாட்டப்பட்ட தாவரத்திற்கு சீமைக்கிழுவை, அகத்தி, முள்முருக்கை போன்றவற்றால் ஆதாரம் வழங்கல்.

❖ வீட்டுத்தோட்டங்களில் கமுகு, பலா, மா போன்ற மரங்களில் மிளகுப் பயிரினை ஏறிகளாக வளரவிடலாம்

### பசளைப்பிரயோகம்

சேதனப்பசளை இடுவதாயின் இரசாயன உரம் இடுவ தன் அளவை அரைவாசியாக குறைத்துக்கொள்ள முடியும்.

| சேதன பசளை வகை | அளவு (கிலோகிராம் / வருடம் / கொடி) |
|---|---|
| சீமைக்கிழுவை இலை | 10 -15 |
| உலர்ந்த மாட்டுச் சாணம் | 15 |
| உலர்ந்த கோழி உரம் | 12 |
| மண்புழு உரம் | 15 |

### வருடாந்த பசளை/கொடி

| காலம் | யூரியா (கிராம்) | [illegible] (கிராம்) | [illegible] (கிராம்) |
|---|---|---|---|
| 1ம் வருடம் | 66 | 50 | 66 |
| 2ம் வருடம் | 33 | 100 | 133 |
| 3ம் வருடம் முதல் அதன் பின்னர் | 200 | 150 | 200 |

### கத்தரித்தல்

❖ மிளகுக்கொடியில் நேர்த்திருப்பக்கிளை, பக்கத்திருப் பக்கிளை என இரண்டு வகை கிளைகள் தோன்றும்.

❖ நேர்த்திருப்பக்கிளையில் 3-4 கிளைகளை மட்டும் அனுமதித்து ஏனைய கிளைகளை அகற்றல் வேண்டும்.

❖ பக்கத்திருப்பகிளைகளை கத்தரித்தல் வேண்டும்.

❖ அவற்றுடன் நீர்வாதுக்கள், நோய்பீடைக்குட்பட்ட வாதுக்கள், உற்பத்தி குறைவான வாதுக்கள் என்பவற்றை கத்தரித்து காற்றோட்டம் உள்ளவாறு பேணுதல் வேண்டும்.

### மகரந்தச் சேர்க்கை

❖ மிளகுக்கொடியில் முனை அரும்புகளில் மஞ்சள் கல ந்த வெள்ளை நிறமான பூக்கள் தோன்றும்

❖ மகரந்தச் சேர்க்கை நீரின் மூலமே நடைபெறுகின்றது.

❖ இதனால் இக்காலங்களில் மழைவீழ்ச்சி முக்கிய மானதொன்றாகும்.

❖ இவற்றிற்கு மாறான காலங்களில் நீரை விசிறுவதன் மூலம் மகரந்தச்சேர்க்கையைத் தூண்டமுடியும்

❖ வருடத்தில் இரு போகங்களிலும் பூக்கள் தோன்றும்

❖ 6-7 மாதங்களில் முதிர்ந்த காய்களை பெறமுடியும்

### அறுவடை

முறையாக பராமரிப்பின் கீழ் வளர்ந்த கொடிகளிலிருந்து 2$^{1/2}$ வருடமளவில் அறுவடையை மேற்கொள்ள முடியும்

➤ பழக்காம்பொன்றில் 100-120 முதிர்ந்த பழங்கள் காணப்படும்

➤ இப்பழங்களுக்கிடையில் பச்சை, மஞ்சள், சிவப்பு நிற வித்தியாசங்களை அவதானிக்கமுடியும்

➤ பழக்காம்பின் நுனிப்பகுதியில் காணப்படும் பழ மானது விரல்களால் நசிக்கமுடியாததாவிற்கு கடினமாக காணப்படும்

➤ பழக்காம்பினை கூரியகத்தியினால் வெட்டி 24-48 மணித்தியாலங்கள் குவித்து வைத்தல் வேண்டும்

➤ இதன்போது பச்சை நிறமான விரல்களால் நசிக்க முடியாத பழங்களும் கறுப்பு நிறமாக மாறும்.

➤ பின்னர் இவற்றை 5-6 நாட்கள் நன்கு காய விடு வதன் மூலம் கறுப்பு நிறமான மிளகினைப் பெற்றுக் கொள்ள முடியும்.



முதிர்ந்த காய்களின் தோற்றம்



பழக்காம்பு ஒன்றின் தோற்றம்

### விளைச்சல்

சாதாரணமாக மிளகுக்கொடி ஒன்றிலிருந்து ஒரு போகத்தின் போது 750-1000g கறுப்பு மிளகினைப் பெறமுடியும்.



வீட்டுத்தோட்ட மிளகுக்கொடி ஒன்றிலிருந்து விளைவாக பெற்றுக்கொள்ளப்பட்ட மிளகு

மேற்கூறியவாறு மிளகுப்பயிரை வீட்டுத்தோட்டங் களில் நடுகை செய்து பராமரிப்பதன் மூலம் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் மேலதிக வருமான த்தையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

வட மாகாணத்தில் அதிகளவான விஸ்தீரணத்தில் மிளகுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதில்லை யாகையால் விவசாயத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தனியார் நாற்றுமேடையாளர்களில் குறிப் பிட்ட சிலர் மிளகு அதிகம் பயிரப்படும் மாவட்டங்களில் இருந்து மிளகுக் கன்றுகளைப் பெற்று விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்நாற்று மேடையாளர்களின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

எனவே வீட்டுத்தோட்டங்களில் மிளகுக் கொடியினை நடுகை செய்ய விரும்புவர்கள் குறித்த நாற்று மேடை யாளர்களுடன் தொடர்பு கொண்டு மிளகுக்கன்று களை கொள்வனவு செய்து நடுகை செய்து பயனடை யுங்கள்.

| இல | நாற்றுமேடை விபரம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01 | திருலங்கா பூங்கனிச்சோலை | பலாலி வீதி உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். | 077 - 6129343 |
| 02 | பவிராஜ பூங்கனிச்சோலை | 311 பலாலி வீதி கோண்டாவில், யாழ்ப்பாணம். | 021 - 2228199<br>077 - 3976203 |
| 03 | ஜெனிஸ்ரன் பூங்கா | நொச்சிமோட்டை, வவுனியா. | 024 – 2221909<br>077 - 4388395 |

திருமதி.செ.செந்தூர்க்குமரன்
விவசாயப் போதனாசிரியர்,
மாகாண விவசாயத்திணைக்களம்,
(வடமாகாணம்).

## பெற்றோர்களே அவதானம்!

# குழந்தைகளைத் தாக்கும் கவாசாகி சுவாச நோய்



## வைத்தியர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**குழந்தைகள் மத்தியில் புதிய வகை நோய் ஏற்படும் ஆபத்து இருப்பதால் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் தமது குழந்தைகள் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.**

கொரோனா வைரஸ் பரவலின் மத்தியில் இந்த கவாசாகி (Kawasaki) என்ற நோய் குழந்தைகள் மத்தியில் ஏற்படுவதால் பெற்றோர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

குழந்தைகள் வைத்தியசாலையின் (Lady Ridgeway Hospital for Children) விசேட வைத்திய நிபுணர் தீபல் பெரேரா தெரிவிக்கையில்,

இந்த நோய் ஏற்கனவே இருந்தாலும் தற்போது கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் மேற்கத்தேய நாடுகளில் வேகமாக ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது இலங்கையில் குறித்த நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டதால் இங்கும் நோயாளர்கள் இனம் காணப்பட்டனர் என்றும் இந்த நோய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவாத போதிலும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மனித உடலில் குருதியைக் கொண்டு செல்லும் நாடியில் காணப்படும் அழற்சியினால் இந்த நோய் ஏற்படுகிறது. இந்த நோய் நடுத்தர அளவுள்ள நாடிகளைத் தாக்குகின்றது.

அதனால் இதயத்திற்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் நாடிகளில் வீக்கம் ஏற்படும் போது இதயத்திற்கு பாதிப்பு ஏற்படலாம் என்றும் இதுவொரு தன்னுடல் தாக்கும் நோய் என்பதோடு குழந்தைகளின் இதயத்தை பாதிக்கும் ஆபத்து உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுவாக இந்த நோயின் அறிகுறிகளாக காய்ச்சல் ஏற்படுகின்றதாகவும் பின்னர் நாக்கு சிவந்து, ஸ்ட்ரோபெரி போன்று தோற்றமளித்தல், தோலில் ஏற்படும் சிவப்பு நிறமான பருக்கள், தோல் உரிதல், உதடு மற்றும் கண் ஆகியன சிவப்பு நிறமாகி வீக்கமடைதல், அத்துடன் கழுத்தில் ஒரு வகை சொறி போன்று உருவாகும். இவை கவாசாகி நோய் அறிகுறியாக இருக்கலாம்.

குறிப்பாக இந்த நோய் 5 முதல் 12 வயது வரையான பிள்ளைகளையே பெரும்பாலும் பாதிக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# உடன் அமுலுக்கு வரும் வகையில் 11 பொலிஸாருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் அறுவர் உள்ளிட்ட 11 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அத்தியாவசிய சேவை கருதி இடமாற்றங்கள் வழங்கப்பட்டன. இவ் இடமாற்றங்கள் தொடர்பில் பொலிஸ் தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.

அதற்கமைய குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஏ.ஆர்.பீ.ஜே.அல்விஸ் நியமிக்கப்பட்டதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களப் பணிப்பாளராக கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி டபிள்யூ. திலகரத்ன அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதாகவும் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் புதிய பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி டி.ஜி.என்.டபிள்யூ.டி.தல்துவ நியமிக்கப்பட்டதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கே.ஜி.எல். கீதால் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதாகவும் அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி டபிள்யூ.எச்.பி.அஜித் ஹெசிறி பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதாகவும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த இடமாற்றங்களுக்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

மேலும் மூன்று பொலிஸ் அதிகாரிகளுக்கும் மற்றும் இரண்டு உதவி பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# குணமடைந்தோர் 660

(கொழும்பு)

நாட்டில் மேலும் 40 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்ததாக சுகாதார அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

இந்நிலையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இலங்கையில் இதுவரை குணமடைந்தோரின் எண்ணிக்கை 660 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 1068 ஆகும்.

இந்நிலையில், கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள 339 பேர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். 101 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டனர்.

அத்தோடு கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி இலங்கையில் 9 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## பங்களாதேஷிலிருந்து 375 பேர் இன்று விமானத்தில் இலங்கை வருகை

(கொழும்பு)

பங்களாதேஷிலிருந்து 375 இலங்கையர்கள் இன்று நாட்டிற்கு வருகை தரவுள்ளனர். கொரோனாத் தொற்று காரணமாக பங்களாதேஷில் டாக்கா நகரில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த இலங்கையர்களே இன்று விசேட விமான சேவை மூலம் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினல் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று தெரிவித்தார். (ஜ-8)

## சஜித் தரப்பினர் நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

வெள்ளை வான் கடத்தல் ஊடகவியலாளர் மாநாடு தொடர்பான வழக்கில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட தரப்பினரால் களுத்துறை நகரில் நடத்தப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் தனிமைப்படுத்தல் சட்டம் தொடர்ந்தும் அமுலில் உள்ள பின்னணியில், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி மக்களை ஒன்று திரட்டி இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுஎனப்பொலிஸ்தலைமையகம் அறிவித்துள்ளது. (ஜ-4)

## பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் விசேட கலந்துரையாடல் நாளை

(கொழும்பு)

பாடசாலையை ஆரம்பிப்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை இடம்பெறவுள்ளதாக கல்வியமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

பாடசாலையின் கல்வி செயற்பாடுகளை விரைவில் ஆரம்பிப்பதா? அல்லது காலம் தாழ்த்தி ஆரம்பிப்பதா? என்பது தொடர்பிலான கலந்துரையாடல் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவின் தலைமையில் நடைபெறவுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் என்.எச்.எம்.சித்ரானந்த தெரிவித்தார். (ஜ-8)

# கொரோனாவின் எதிரொலி சனிக்கிழமைகளில் வழக்கு

(கொழும்பு)

இலங்கை நீதிமன்ற வரலாற்றில் முதற்தடவையாக சனிக்கிழமைகளில் வழக்கு விசாரணைகளை நடத்துவதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வழக்கு விசாரணைகளில் ஏற்பட்ட தாமதங்களை தவிர்ப்பதே இதன் நோக்கமாகுமென்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் ஜூன் மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் வழக்கு விசாரணைகளை நடத்துவதற்கு உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மார்ச் மாதம் 23 ஆம் திகதி முதல் மே மாதம் 6 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விசாரணைக்கு எடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் அறிவித்தார். (ஜ-4)

## கொத்துக் கொத்தாய் கொன்று குவிக்கும் கொரோனா

# தடுப்பூசிக்காய் ஏங்கித் தவிக்கும் உலகம்

# பத்தாயிரம் பேரில் பரிசோதிக்கும் இங்கிலாந்து

(லண்டன்)

**முதல் அலையடித்தே மீளாத மனித குலத்தை, இரண்டாவது அலை என்னவெல்லாம் செய்யப்போகிறதோ என்று விஞ்ஞானிகளே கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த கொரோனா வைரஸிற்கு இப்போதைக்கு முடிவு கட்ட வேண்டும் என்றால் உடனடியாகத் தேவைப்படுவது தடுப்பூசிதான். அதைத் தவிர வேறு வழியில்லை.**



10 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு கொரோனா தடுப்பூசியைச் செலுத்தி சோதிக்கும் திட்டத்தை கையில் எடுப்பதாக ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஊரடங்கு, வீடுகளுக்குள் மக்கள் முடக்கம், முகக் கவசம், தனிமனித இடைவெளியைப் பின்பற்றல்... இப்படி எத்தனை எத்தனையோ உத்திகளை நீங்கள் வகுத்து செயற்படுத்தி வந்தாலும் எதற்கும் நான் கட்டுப்படமாட்டேன் என்று சொல்வது போலத்தான் கொரோனா வைரஸ் தினமும் உலகமெங்கும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோரை தொடர்ந்து பாதித்து வருகிறது. இதைக் கண்டுதான் உலகம் வியக்கிறது. இனி என்னவெல்லாம் ஆகப்போகிறதோ என அஞ்சவும் செய்கிறது.

3 இலட்சத்து 40 ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்டோரை பலி கொண்டாயிற்று. ஆனாலும் கொரோனா வைரஸின் ஆவேசப் பசி அடங்கவில்லை.

உலக நாடுகளின் பொருளாதாரம் ஒரு பக்கம் சரிந்து கொண்டே போகிறது. நாளுக்கு நாள் மக்கள் பிரச்சினைகளால் அல்லாடுகிறார்கள். வாழ்வாதாரத்தை தொலைத்து விட்டு ஒரு வேளை கஞ்சிக்கே வழியின்றி செத்துப்போன நாயின் மாமிசத்தை மனிதன் சாப்பிடும் அவலம் ராஜஸ்தானில் நேரிட்டிருப்பது இதுவரை உலகம் காணாத ஒன்று.

அதனால்தான் இதுவரை இல்லாத அளவுக்கு உலகமெங்கும் உள்ள விஞ்ஞானிகள் தடுப்பூசி கண்டுபிடிப்பில் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

ஆனாலும் இதில் முந்திச் சென்று கொண்டிருப்பது என்னவோ இங்கிலாந்துதான். பாவம் இங்கிலாந்து. ஐரோப்பிய நாடுகளின் தொற்று மையம் என்று சொல்கிற வகையில் அங்கு 2 இலட்சம் பேருக்கும் அதிகமானோரை இந்த வைரஸ் தொற்றி இருக்கிறது. 36 ஆயிரத்துக்கும் அதிகமானோர் சிகிச்சை பலனின்றி இறந்திருக்கிறார்கள். எனவேதான் இங்கிலாந்து தடுப்பூசி கண்டுபிடிப்பதில் கூடுதல் கவனம், அக்கறை செலுத்துகிறது.

இந்த நிலையில்தான் இங்கிலாந்தில் ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கொரோனாத் தடுப்பூசியை உருவாக்கி மனிதர்களுக்கு செலுத்துவதில் மிகவும் தீவிரமாக இருக்கிறார்கள் என்றே சொல்ல முடியும்.

ஏற்கனவே 1000 இற்கும் மேற்பட்ட தன்னார்வலர்களுக்கு கொரோனா தடுப்பூசியை போடும் பணியில் ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதில் தடுப்பூசியின் பாதுகாப்புத்தன்மை ஆராயப்படும்.

அடுத்த கட்டமாக மொத்தமாக 10 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு (10 ஆயிரத்து 260 பேருக்கு) தடுப்பூசியைச் செலுத்தி சோதிக்கும் திட்டத்தை கையில் எடுப்பதாக ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகள் நேற்று முன்தினம் அறிவித்தனர். முதியோர், குழந்தைகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் தடுப்பூசி போடப்போகிறார்கள்.

தடுப்பூசியை பல்லாயிரக் கணக்கானோருக்கு செலுத்திப் பார்க்கும் சோதனையில் ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இறங்கி இருக்கும் வேளையில் அரசாங்கங்களும் கம்பனிகளும் தடுப்பூசி உற்பத்தியை அளவிடத் தொடங்கி விட்டன. தடுப்பூசி தயாரிக்கும் ஓட்டத்தில் வெற்றி பெறக்கூடும் என்று எதிர்பார்க்கிற தடுப்பூசியை பெருமளவில் அவை இலக்காக கொண்டுள்ளன.

அதேநேரத்தில் அவர்களின் தேர்வு தோல்வியுற்றால் அவர்கள் பெரும் இழப்பையும் சந்தித்தாக வேண்டும்.

அதேநேரத்தில் அதிர்ஷ்டவசமாக வெற்றி பெற்று விட்டாலோ, தடுப்பூசி வெகுஜன பயன்பாட்டுக்கு சில மாதங்களிலேயே வர வேகம் பிடிக்கும். அந்த நாளைத்தான் உலகம் எதிர்பார்த்து காத்துக் கிடக்கிறது. (2-5)

## கொரோனா விவகாரம்

# மிரட்டும் அமெரிக்கா எச்சரிக்கும் சீனா

(பீஜிங்)

கொரோனா பரவல் தொடர்பில் சீனாவுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எங்களின் பதிலடி கடுமையாக இருக்கும் என அமெரிக்காவை எச்சரித்தது சீனா.

சீனாவின் வுஹான் நகர பிரபலமான விலங்குகள் சந்தையிலிருந்து உலகையே அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் பரவியது என்று சீனா கூறிவருகிறது.

ஆனால், கொரோனா வைரஸ் வுஹான் ஆய்வகங்களில் செயற்கையாக உருவாக்கப்பட்டது, கொரோனா பரவலை கையாண்ட விதத்தில் சீனா வெளிப்படைத்தன்மையுடன் நடக்கவில்லை, உலக நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்ட உயிரிழப்பு, பொருளாதார இழப்புக்கு சீனாதான் பொறுப்பேற்க வேண்டும்.

ஆதலால், சீனாவிடம் இருந்து இழப்பீடு பெறுவதற்காக சட்ட



நடவடிக்கை எடுப்போம் என அமெரிக்கா கூறி வருகிறது.

இந்நிலையில் சீன நாடாளுமன்றத்தின் செய்தித்தொடர்பாளர் ஹாங்யேசூயி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்,

உலகில் கொரோனா வைரஸ் பரவியதற்கு சீனாதான் காரணம் என்பதை நாங்கள் ஏற்க முடியாது. இது அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டு.

இதற்காக அமெரிக்கா எங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க திட்டமிட்டிருப்பதையும் ஏற்க முடியாது. இது சர்வதேச உறவுகளின் விதிமுறைகளை மீறி, சர்வதேச சட்டங்களை மீறி நடப்பதாகும்

அமெரிக்கா ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்தாலோ அல்லது மசோதா கொண்டு வந்தாலோ அதை சீனா கடுமையாக எதிர்க்கும்.

அவ்வாறு அமெரிக்கா ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் அதற்கு சீனா தரப்பில் கடும் பதிலடி நடவடிக்கைகள் இருக்கும்.

அமெரிக்கா முதலில் மற்ற நாடுகள் மீது குற்றம்சாட்டுவதை நிறுத்த வேண்டும். தன்னுடைய நாட்டில் நிலவும் சொந்தப் பிரச்சினைகள் மீது கவனம் செலுத்த வேண்டும்,

சொந்தப் பிரச்சினைகளில் இருந்து கவனத்தை திசைதிருப்பும் அமெரிக்காவின் செயல் பொறுப்பானது அல்ல.

அமெரிக்காவின் சட்ட நடவடிக்கையையும் ஏற்க மாட்டோம், இழப்பீடு கோருவதையும் ஏற்க முடியாது.

கொரோனா பரவலை பொறுத்தவரை சீனா சிறப்பாகச் செயற்பட்டு வைரஸைக் கட்டுப்படுத்தியது. ஏராளமான தியாகங்களைச் செய்து கொரோனா போரில் சீனா வென்றுள்ளது.

சீனாவில் கொரோனாத் தொற்று ஏற்பட்டதிலிருந்து உலகிற்கு வெளிப்படைத்தன்மையுடனே அனைத்து தகவல்களையும் சீனா தெரிவித்து வந்தது.

உலக சுகாதார அமைப்புக்கும் அனைத்து தகவல்களையும் தெரிவித்தோம். உலக நாடுகளுக்கும் சரியான நேரத்தில் எச்சரிக்கையும் செய்தோம்.

அறிவியல் அறிஞர்கள், மருத்துவ ஆய்வு செய்து அவர்கள் முடிவு செய்யட்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-5)

# கொரோனாத் தாக்கம் நீங்கினாலும் கடன் சுமையும் மனத்தாக்கமும் நீங்காது

## பொருளியல் நிபுணர் எச்சரிக்கை

(ஜெனிவா)

கொரோனா வைரஸின் தாக்கம் 10 ஆண்டுகளுக்கு கடன் சுமைகளையும் மனத்தாக்கத்தையும் ஏற்படுத்தும் என பொருளாதார நிபுணர் றூபினி தெரிவித்தார்.

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸால் சர்வதேச ரீதியில் 53 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா வைரஸ் தொற்றினால் ஏற்படும் நீண்டகால வீழ்ச்சி மற்றும் மந்தமான மீட்சி என்பன சுட்டிக் காட்டத்தக்கது.

கொரோனாத் தொற்று நெருக்கடியின் பின்னரான காலப்பகுதியில் சில வேலை வாய்ப்புக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பாது போகலாம்.

உலகப் பொருளாதாரம் இதுவரை ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து இவ்வாண்டு இயல்புக்கு திரும்பினாலும் குறித்த வேலை வாய்ப்புக்கள் திரும்பாது போகலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-2-8)

# தன்னைத்தானே தனிமைப்படுத்திய பிரதமர்

(கோலாலம்பூர்)

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக, மலேசியப் பிரதமர் முஹைதீன் யாசின் தன்னைத் தானே தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

பிரதமரின் அலுவலக சந்திப்பில் கலந்துகொண்ட அதிகாரி ஒருவருக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், அவரும் தற்போது 14 நாட்களுக்கு தனித்திருக்கவுள்ளார்.

கொரோனா நோய்த் தொற்றுக்



கான பரிசோதனையில் பிரதமருக்கு வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதியாகி இருந்தபோதிலும் பாதுகாப்பு கருதி அவர் இந்த முடிவினை எடுத்துள்ளார். (2-5)

# சுதந்திரத்திற்குப் பின் இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

01

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



நவீன ஆட்சி முறைகளில் ஜனநாயகம் மிகவும் பிரபல்யமானது. "மக்களால் மக்களுக்கான மக்களின் ஆட்சி" ஜனநாயகம் என்பது ஐக்கிய அமெரிக்காவின் 16 ஆம் ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கனின் வரைவிலக்கணமாகும். "அனைவருக்கும் உரிமைகள் கிடைக்கும் ஓர் ஆட்சி முறை" என்று சீலர் எனும் அரசியல் அறிஞர் ஜனநாயகத்தை அறிமுகப்படுத்துகிறார். புராதன கிரேக்கத்தில் எதென்ஸ், ஸ்பாட்டா முதலிய நகர அரசுகளில் நேரடி ஜனநாயகம் நிலவியது. அங்கு ஒன்று கூடிய பிரஜைகள் ஆட்சி நிர்வாகம் தொடர்பான முடிவுகளை எடுத்தனர். அதாவது நேரடி ஜனநாயகம் என்பது மக்கள் எல்லோரும் ஒன்று கூடி முடிவெடுப்பதாகும்.

வாக்குரிமை உள்ள பிரஜைகள் ஆட்சி நடவடிக்கைகளுக்காகத் தமது பிரதிநிதிகளைத் தேர்தல் மூலம் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்தல் பிரதிநிதித்துவ ஜனநாயகம் எனப்படும். தற்போது உலகின் பெரும்பாலான நாடுகளில் பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சியே மேற்கொள்ளப்படுகின்றது. சனத்தொகை அதிகரித்தமை, மனித தேவைகள் அதிகரித்தமை, முதலிய காரணங்களால் நேரடி ஜனநாயகத்தை செயற்படுத்துவதும் முடியாத காரியமாகும். அதற்குப் பதிலாக பிரதிநிதித்துவ ஜனநாயகம் இன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது

ஜனநாயகம் வெற்றியளிப்பதற்கான அடிப்படைக் காரணிகள் இரண்டு, ஒன்று சுதந்திரம் மற்றது சமத்துவம். அனைவரும் சமூகத்தில் கௌரவமாக வாழ்வதற்கான உரிமையைப் பெற்றிருத்தல் சுதந்திரமாகும். பிரஜைகள் அனைத்து அடிப்படை உரிமைகளையும் அனுபவிப்பதற்கு சமூகத்தில் சமத்துவம் நிலவ வேண்டும். ஜனநாயகத்தின் வெற்றிக்கான காரணிகள் சர்வஜன வாக்குரிமை, காலத்துக்குக் காலம் தேர்தல் நடைபெறுதல், அரசியல் அறிவு படைத்த மக்கள் அரசியல் கட்சிகள் காணப்படுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

## அரசியல் கட்சிமுறை

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் பிரதான ஆயுதம் அரசியல் கட்சிகளாகும். கட்சி முறையைத் தவிர்த்து ஜனநாயக அரசியலைப் பற்றி பேசமுடியாத அளவுக்கு இரண்டும் பின்னிப்பிணைந்துள்ளன. பிரித்தானியாவில் பாராளுமன்ற ஜனநாயகத்தை நடைமுறைப் படுத்துவதற்காக 17ஆம் நூற்றாண்டில் அரசியல் கட்சிகள் ஆரம்பமாகின. இன்று ஜனநாயகத்தின் அடிப்படையே அரசியல் கட்சிகளாகக் காணப்படுகின்றன. ஆட்சியுரிமையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அரசியல் கட்சிகள் தமது கொள்கையை மக்கள் மத்தியில் முன்வைக்கின்றன. அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, வெளிவிவகார, சமூக நலன்புரி முதலிய துறைகளில் தாம் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் பற்றி கட்சி கொள்கைகள் விளக்கமளிக்கும். பொது மக்கள் கட்சிகளின் கொள்கைகளுக்கேற்ப தனது பெறுமதி மிக்க வாக்குகளை தேர்தலின் போது தமக்கு விருப்பமான கட்சிகளுக்கு வழங்குவர். தேர்தலின் போது அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின்படி அரசாங்கக் கட்சியும் எதிர்க்கட்சியும் தெரிவு செய்யப்படும்.

## இரு கட்சி முறை

ஒரு நாட்டில் இரண்டு கட்சிகள் மட்டும் காணப்படுமாயின் அது இரு கட்சி முறை எனப்படும். இம்முறையே சிறப்பான ஜனநாயக ஆட்சிக்கு வழிவகுக்கும். இம்முறையில் பலமான ஆளும் கட்சியும் பலமான எதிர்க்கட்சியும் அமையும். அரசியல் கட்சி முறை ஆரம்பமான பிரித்தானியாவில் ஆரம்பக் காலத்தில் இரு கட்சிகளே இருந்தன. எனினும் தற்போது பலகட்சிகள் உள்ளன. இன்றும் அங்கு தொழிற்கட்சி மற்றும் பழைமை பேண் கட்சி (கொன்சவேட்டிவ்) ஆகிய இரு கட்சிகளுள் ஒன்றே ஆட்சிக்கு வருகின்றன. எனவே இங்கிலாந்து இருகட்சி முறை கொண்ட நாடாக கருதப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவிலும் முக்கிய கட்சிகள் இரண்டு மாறி, மாறி ஆட்சிக்கு வருகின்றன. எனவே அந்நாட்டிலும் இரு கட்சிமுறை நிலவுவதாகக் கருதப்படுகிறது.

## பல கட்சி முறை

ஒரு நாட்டில் இரண்டுக்கும் அதிகமான கட்சிகள் காணப்படுமாயின் அது பல கட்சி முறையாகும். ஜேர்மனி, இத்தாலி முதலிய ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியா, இலங்கை முதலிய ஆசிய நாடுகளிலும் பல கட்சி முறையே காணப்படுகின்றது. இலங்கையின் மக்கள், ஆட்சி நடைமுறையில் நிறுவனங்களுக்கான பிரதிநிதிகளை தேர்தலினூடாக தேர்ந்தெடுப்பதன் மூலம் நாட்டின் ஆட்சி நடவடிக்கைகளோடு இணைந்து கொண்டமை 1911 ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இன்று பிரதிநிதித்துவ ஆட்சி நடைமுறை ஜனாதிபதி, பாராளுமன்றம், மாகாணசபை மற்றும் உள்ளூர் அதிகாரசபை என்பன தேர்தல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இச் சபைகளுக்கு பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் முறை, நிருவாகக் கட்டமைப்பு, தேர்தல்களை நடத்தும் முறை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சபைகளை உருவாக்கல் என்பன 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பிலும் அதன் பின் வந்த திருத்தச் சட்டங்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுகின்ற, இறுதியாக பொதுமக்கள் வசம் அதிகாரம் சென்றடைகின்ற ஆட்சி முறையொன்றாக சனநாயக ஆட்சி முறை ஏற்றுக்கொள்ளப்படுவதனால், பொதுமக்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு எடுத்துக்கொள்வது எவ்வாறென்பது முக்கியமான ஒரு விடயமாகும்.

பொதுமக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஆட்சி அமைப்பும், அதற்கான பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முறையும் ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமான அந் நாட்டின் அரசியல் அமைப்பிலும் தேர்தல் நியதிச் சட்டங்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கும். ஒரு நாட்டின் தேர்தல் முறை அந்நாட்டின் வரலாற்று, சமூக மற்றும் அரசியல் நிலைமைகளோடு பிணைந்த பல்வேறு காரணிகளின் அழுத்தம் காரணமாக உருவானதும் மக்களின் தேவைகளுக்கேற்ப அடிக்கடி திருத்தங்களுக்குள்ளானதுமான ஒரு முறையென அழைக்க முடியும். காலனித்துவ நாடுகளாகக் காணப்பட்ட உலகின் பெரும்பாலான நாடுகள் சுதந்திரம் கிடைத்ததன் பின்னர், அமைத்துக்கொண்ட தமது நாடுகளுக்கான ஆட்சிமுறைமைகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறைமைகள், காலனித்துவ ஆட்சியாளர்களின் தாய்நாடுகளில் பின்பற்றப்பட்ட முறைகளைப் பெரிதும் ஒத்தமுறைகளில் அமைப்பதற்கான பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அத்தகைய நாடுகளின் வரலாற்றுத் தகவல்களைப் பரிசீலிக்கின்ற போது தெளிவாகின்ற ஒரு விடயமாகும். இவ்விதத்திலான அழுத்தமொன்று பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களினால் இலங்கையின் விடயத்திலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## "பிரதிநிதித்துவம்"

"பிரதிநிதித்துவம்" தொடர்பான கோட்பாடு நிகழ்காலத்தில் பல்வேறு விதங்களில் பொருள் கோடல் செய்யப்படுகின்றது. சட்டவாக்க சபையொன்றிற்கு ஏதேனுமொரு தேர்தல் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதி அத் தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக கூறப்படுவதால் இங்கு நிகழ்கின்ற பிரதிநிதித்துவமுறை "அபிலாசைப்பிரதிநிதித்துவம்" என அழைக்கப்படுகின்றது.

பிரதிநிதி தமது தொகுதிக்குள் உள்ள வாக்காளர்கள் சார்பாக சட்ட வாக்க சபைக்குள் பிரதிநிதித்துவத்தை மேற்கொண்டு வாக்காளரின் நலனுக்காக நடவடிக்கையெடுப்பாரென நம்பப்படுகின்றது. அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டியவிதம் குறித்த இரண்டு கருத்துக்கள் காணப் படுகின்றன. பிரதிநிதிதான் சட்டவாக்கச் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்ட தேர்தல் தொகுதியின் விருப்பத்திற்கமைய நடந்து கொள்ளல் வேண்டுமென்பது ஒரு கருத்தாகும். அது தொடர்பாகவுள்ள அடுத்த கருத்து யாதெனில் பிரதிநிதி தமது தொகுதிக்கு சிறந்தவையெனத்தான் கருதுகின்ற விதத்தில் நடந்து கொள்ளவேண்டும் என்ற கருத்தாகும்.

நிகழ்காலத்தில் அரசியல் கட்சிகள் என்ற அமைப்புக்களின் சில கொள்கைகளின் அடிப்படையில் நடவடிக்கையெடுப்பதற்கு, அங்கத்தினர்களாக அவற்றோடு இணைந்து நடவடிக்கையெடுப்பவர்கள் தேர்தல்களின் போது கட்சியினால் தேர்தலுக்கான வேட்பாளர்களாக முன் வைக்கப்படுகிறார்கள். இப் பணியின்போது அரசியல் கட்சிகள், இடைத்தரகர்களாக செயற்படுவதனால் அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படுகின்ற வேட்பாளர்களில் ஒருவரை நிகழ்கால தேர்தல்களின் போது தமது வாக்கினை வழங்கி தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை வாக்காளருக்கு ஏற்பட்டுள்ளது.

தேர்தல் முறைமைகளுக்கமைய மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் பெருமளவிலான முறைமைகள் உலகெங்கும் செயற்படுவதைக் காணமுடிகின்றது. உலக நாடுகளில் காணப்படுகின்ற அத்தகைய முறைமைகளில் ஒன்றுக்கு ஒன்று முரணான விடயங்கள் பல காணப்பட்ட போதிலும் அவை அனைத்தும் முக்கியமாக பெரும்பான்மை முறைமை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை என இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு விளக்கப்படுகின்றன.

## பெரும்பான்மை முறைமை (Majority System)

இம் முறைமைகளில் பெரும்பான்மை முறைமையின் **(Majority System)** கீழ் தேர்தல் தொகுதியின் அதிகூடுதலான வாக்குகளை பெற்றுக்கொள்கின்ற வேட்பாளர், பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். **(First Past the Post System – FPP)** அவர் உரிய தேர்தலில் செல்லுபடியான வாக்குகளில் அறுதிப் பெரும்பான்மையொன்றை **(Absolute Majority)** பெற்றிருக்கின்றார் எனக்கருத்தில் கொள்ளப்படவும் மாட்டாது. "இது எளிய பெரும்பான்மை தேர்தல்முறை" எனவும் அழைக்கப்படுகின்றது.

அதாவது எளிய பெரும்பான்மை தேர்தல்முறை என்பது ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களில் யார் அதிக வாக்குகளைப் பெறுகிறாரோ அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும் போது அவரை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர்கள் யாவரும் சேர்ந்து பெற்ற வாக்குகளைச் சேர்த்துப் பார்த்தால், பலசமயம் அது வெற்றி பெற்றவர் பெற்ற வாக்குகளைவிடக் கூடுதலாக இருப்பதுண்டு.

எனவே அந்த தொகுதியில் சிறுபான்மை வாக்குகளைப் பெற்றவர் வெற்றி பெற்று அந் தத் தொகுதியின் பிரதிநிதியாகச் செல்லும் நிலை ஏற்படுகிறது. இந்த முறைமை "பெரும்பான்மைக்கு அதிகாரம்" என்ற ஜனநாயகத்தின் அடிப்படைக்கு எதிராக உள்ளது.

இத் தேர்தல்முறை இரு கட்சிகள் போட்டியிடும் தேர்தல் முறைக்கு மட்டுமே பொருத்தமானதாகும். ஆனால், ஒரு தொகுதியில் பல கட்சிகள் போட்டியிடும் தேர்தல் முறைக்கு விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை (Proportional Representative System) சிறப்பானதாகும்.

## விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை

விகிதாசார பிரதிநிதித்துவ முறையொன்றின் கீழ் **(Proportional Representative System)** ஒரு கட்சி அல்லது குழுசார்பாக வாக்காளரினால் தமது வாக்குகள் பயன்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக வாக்களிக்கப்பட்ட அக் கட்சியின் அல்லது குழுவின் வேட்பாளர்கள் பலர் சார்பாக விருப்புகளை அடையாளமிடுவதற்கும் வாக்காளருக்கு இடமளிக்கப்படுகின்றது.

(தொடரும்...)